

பச்சை இரத்தம்
நீந்தும் காடு
முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல்

# பச்சை இரத்தம்
# நீந்தும் காடு...

(கவிதைகள்)

முகம்மதுத்தம்பி முகம்மது நௌபல்

ஆயிஷா பதிப்பகம்
மருதமுனை.

# பச்சை இரத்தம் நீந்தும் காடு
## கவிதைகள்

# pachchai iraththam neenthum kaadu
## Poems


ஆசிரியர்
**எம்.எம். நௌபல்** (SLPS, SLAS)

Author
**M.M. Noufal** (SLPS, SLAS)



பதிப்புரிமை
**எம்.எம். மிஹ்லார், மருதமுனை.**

Copyright
**M.M. Mihlar, Maruthamunai.**



வெளியீடு
**ஆயிஷா வெளியீட்டகம்,**
**520, மசூர் மௌலானா வீதி,**
**மருதமுனை.**

Published by
**Aysha Publication**
520, Mashoor Moulana Road,
Maruthamunai - 03.

கணனி அச்சு, அட்டைப்படம்
முபா

Type Set & Cover Design
**MOFA**

முதற்பதிவு
2017.04.02

First Published
2017.04.02

அச்சுப்பதிவு
**அப்னா பிரின்ட், மருதமுனை.**

Printed by
**Abna Print, Maruthamunai.**



இணையத்தளம் :
**www.noufallanka.org**
தொலைபேசி : 077-6009247
மின்னஞ்சல் :
**nawfalds@gmail.com**

Web site :
**www.noufallanka.org**
Phone : 077-6009247
E mail :
**nawfalds@gmail.com**



விலை : 280/=
ISBN : 978-955-42405-3-7

Price : 280/=
ISBN : 978-955-42405-3-7



விற்பனை, விநியோகப் பிரிவு
பெரியார் வாசகர் வட்டம், மட்டக்களப்பு
இல 83/1, ரத்தினம் வீதி,
வாழைச்சேனை
தொ.இல : 0772532296

எனது அப்பச்சி

'டெய்லர்" என்று அழைக்கப்பட்ட

(புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீனின் முதலாவது தம்பி)

நூஹுலெவ்வை அவர்களுக்கு...

# அனுபவக் குறிப்பு

கவிதை ஆன்மாவுடன் சம்மந்தப்பட்டிருத்தல் வேண்டும். அப்போது தான் அது உயிருள்ளதாக மாறி மேன்மை நிலையை அடையும். அத்துடன் கவிதை மனதுடன் சம்மந்தப்பட்டது. மனம் அழகாக அழகாக கவிதையும் அழகு பெறும். எனவே கவிதையாக்கம் என்பது ஓர் உணர்வு மிகுதியால் உண்டாகும் ஒரு ஆக்க வெளிப்பாடு. கவிதைகளின் மையத்தில் இழையாக சில புனைவுகள் இருப்பதையும் அது தந்திரமாக கையாளப்பட வேண்டியதையும் தடையற்ற மொழி உலா வருவதையும் அதிகம் விரும்புவன் நான். அதீத புனைவுக்கு வாய்ப்பை குறைத்து கவி மனம் மகிழ்ச்சியடையக் கூடிய அளவில் மென் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு கவிதையை ஆக்குவது சிறப்புடையது. மேலும் கவிதையினுள் மிதக்கும் மொழிக் குடங்கள் உயிர் பெற்று திரியும்போது கவிதை அழகு பெறுகின்றது.

இத்தொகுதியில் அவ்வாறான விடயங்கள் கவிதைக்கான ஊடகமாக தொழிற்பட்டு கவிதை களின் புழங்கு வெளி விரிவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளன என்பது எனது அபிப்பிராயம்.

# ஓயாப் பயணி

ஒரு புதியவரைப் பற்றி உற்சாகத்துடனும் சந்தோஷத்துடனும் எழுதுவதற்கு அவருடைய எழுத்துகள் நமக்கு இடமளிக்க வேண்டும். ஆனால் அத்தகைய ஒரு வாய்ப்பை அந்தப் படைப்பு தராத போது எதையும் எழுதாமல் விட்டு விடுவதே அவருக்கும் எனக்கும் நல்லது என்ற முடிவை நான் பல தடவைகள் எடுத்ததுண்டு.

நண்பர் நௌபல் எழுத்துலகுக்கு புதியவர் போல் தோன்றினாலும் புதியவர் அல்ல. அவருடைய முதலாவது கவிதைத் தொகுப்பான "மாம்பழக் கொச்சி" வெளியீட்டு நிகழ்வில் நானும் கலந்து உரையாற்றியது நேற்றுப் போல் இருக்கிறது. மாதம் மும்மாரி போல் அதற்குள் அவரிடமிருந்து அடுத்தடுத்து மூன்று தொகுதிகள்.

முகநூலில் அவர் மும்முரமாக இருக்கிறார். நீளத்தில் குறைந்த கவிதைகளுடன் அடிக்கடி தன் அபிமானிகளை முகநூலில் சந்தித்து தன் இருப்பையும், தொடர் பாடலையும் தக்க வைத்துக் கொள்பவர். முகநூல் சுவரில் பதியப்படும் பிறருடைய கவிதைகளையும் வஞ்சகமின்றி "ஆஹா அருமை" என்று பாராட்டுகிறார். விமர்சகர்களின் 'குசுகுசுப்புகளை' யெல்லாம் அவர் கண்டுகொள்வதில்லை. கோடையின் வெம்மையில் திட்டித் தீர்த்து சண்டையிட்டுக் கொள்ளும் இந்தப் 'பிரகிருதிகள்' மாரி மழையில் சமாதானமாகி அணைத்துக் கொள்ளும் காட்சி களைக் கண்டு கடந்து வந்தவர். காலம் இப்படி அவரை ஒரு பொன் மீனாக்கி ஆற்றிலும், கடலிலும் நீந்தி வாழும் வல்லமையை வழங்கியிருக்கிறது. அந்த உற்சாகத்துடன் ஓயாமல் இயங்குகிறார். 'எமக்குத் தொழில் கவிதை' என்று ஒருவன் நம்புவதும் அத்தகைய மனம் அவனுக்கு வாய்ப்பதும் எவ்வளவு பெரிய கொடுப்பினைகள்.

உலகின் பெருங்கவிஞர்களுடனோ, கவிதைக் கோட்பாடுகளுடனோ நண்பர் நௌபலுக்கு உள்ள பரிச்சயம் பற்றி நான் அறியேன். பரிச்சய மில்லாமல் கூட இருக்கலாம். ஒரு கவிஞனைக் கண்டனம் செய்யவும் குற்றம் சுமத்தவும், ஒதுக்கவும் இது மாத்திரம் போதுமான காரணமல்ல.

எல்லாவற்றையும், எல்லோரையும் தெரிந்ததாக 'பாவ்லா' பண்ணுவதை விட இதொன்றும் பெரிய குற்றமல்ல. அவர் ஒரு பயணி. சிறிது வெளிச்சத் துடனேயெனினும் ஆரம்பித்த இடமும் செல்லும் திசையும், அடைய வேண்டிய இலக்கும் அவருக்கு நன்கு தெரிந்தேயுள்ளது.

கவிதை பற்றி பலருக்கும் பல்வேறு பார்வைக் கோணங்கள் இருக்கலாம். நல்ல கவிதை, சுமாரான கவிதை, போலிக் கவிதை என்பவற்றைப் பகுத்தறிவது அவ்வளவு எளிதான காரியமல்ல. துணுக்குகளை, வசீகரமான வரிகளை, அரசியல் கோஷங்களைக் கவிதையாகக் கருதுவோர் உள்ளனர். ஏற்ற இறக்கங்களுடன் வாக்கியங்களை வாசித்து அவற்றைக் கவிதையென நிரூபிக்க முயல்பவர்களைக் கண்டிருக்கிறோம். இதன் இன்னொரு பக்கமாக வரிகளை உடைத்துப் போட்டுக் கவிஞர்களான பலரையும் நாம் கண்டு கொண்டிருக்கிறோம். கவிதைகள் மீதான தொடர்ச்சியான வாசிப்பு ஒரு வேளை ஒரு கவிதை குறித்த தார தம்மியங்களை அறிந்துகொள்ள ஒரு வாசகனுக்கு உதவக் கூடும்.

இது முகநூல் காலம். ஏராளமான கவிதைகள் அங்கே பதியப்படுகின்றன. கவிதை என்பது கலையா அல்லது தொழில்நுட்ப வித்தையா என்ற குழப்பங்களை உண்டாக்கக் கூடிய பல கவிதைகள் அங்கேயுண்டு. பல வற்றையும் தெருச் சுவரொட்டிகளை வேடிக்கை பார்ப்பது போல பார்த்து விட்டு நகர்ந்து செல்ல வேண்டியிருக்கிறது. எங்கேயும் எல்லாவற்றிலும் ஓர் அவசரம் தெரிகிறது. எல்லோருக்கும் தேவை உடனடியாக கைதட்டல். கவிஞன் என்ற அடையாளம். இத்தகைய வலிந்து எழுதப்பட்ட எழுத்துக் களுடன் எனக்கு எப்போதும் ஓர் ஒவ்வாமை உண்டு. அவற்றுடன் ஒன்றிக்க முடிவதில்லை.

ஒரு கவிதை நம்மை வியக்கவும் ஈர்க்கவும் வைக்க வேண்டுமானால் நீண்ட காலப் பாரம்பரியமும் செழுமையும் கொண்ட தமிழ்க் கவிதையின் பழைய சாதனைகளை அது தாண்டியிருக்க வேண்டும். அயலில் நிகழும் மாற்றங் களைக் கிரகித்து, தன்னில் படரவிட்டு, தன்னைப் புதுப்பித்து, எல்லையை மேலும் முன்னோக்கி நகர்த்தியிருக்க வேண்டும். அப்படியில்லையெனில்

அங்கே விதந்துரைக்கப்பட எதுவுமிருப்பதாகத் தோன்றவில்லை. இவற்றைக் கணக்கிலெடுக்காத கவிதைகள் ஒரு சீரிய வாசகனின் பார்வையில் காலாவதியான, நீர்த்துப் போல, சலிக்க வைக்கும் கவிதைகள் ஆகி விடுவது இயல்பானது.

நௌபல் அவர்களிடமிருந்து நான்காவதாக வெளிவரும் இந்தக் கவிதைத் தொகுப்பு நினைவேக்கம் (பால்யகால நினைவுகள்) உலக அரசியல் (நியாயங்களைத் தேடி, போர்க்காடு) குடும்ப பாசம் (அவள் வளர்ந்து விட்டாள்) சமூக விமர்சனம் (மெல்லச் சாகும் உயிர்கள், முறைப்பாடு, எமது மண், பரிணாமம், பொன்னாடை, முகப்புத்தகம், யாசகன்) என்ற சில அம்சங்களை தொட்டுச் சென்றாலும் அவருடைய கவிதை வெளியில் காலில் பிணைந்த சங்கிலியாகப் பின்தொடர்வது காதலின் தகிப்பு என்று சொன்னால் அது தவறில்லை.

இந்தத் தகிப்பு அஜந்தா சித்திரங்களில் ஒருத்தியைப் பொருத்திப் பார்க்க வைக்கிறது. ஒருத்தியின் புருவங்களில் மழையைக் காண்கின்றது. பெண்கள் தேவ கன்னிகளாகத் தெரிகின்றனர். ஒருத்தியின் நிழல்கூட சிரிப்பது போல் தோன்றுகிறது. தன் ஆயுள் ரேகையை ஒருத்தியின் காலடியில் காண்கின்றது. ஒருத்தியின் புன்னகை நீரில்லாமல் கவிதைகளெல்லாம் வாடிக் கிடக்கின்றது. மனதின் படிக்கட்டுகளில் ஒருத்தியின் உயிர் வழுக்கி வழுக்கி ஏறிக் கொண்டிருக்கிறது.

காதலின் இந்தப் பித்து நிலை, சொப்பனாவஸ்தை, வியாக்கியானம் பல கவிதைகளிலும் வெளிப்படுகின்றன. அடிப்படையில் இவையெல்லாமே அதீத கற்பனையில் பிறந்தவை. ரொமேன்டிசிஸத்தின் (*Romanticism*) சட்டகத்துக்குள் அமைந்தவை. ஆனால் பல கவிதைகளிலும் ஓர் பயண மனநிலையும், ஏகாந்த உணர்வும் இழையோடுவதைக் காணலாம். இந்த மனவிம்மலும், மிதப்புணர்வும் நௌபல் அவர்களின் பல கவிதைகளுக்கு நறுமண மூட்டுகின்றன என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

முக்கியமாக அவருடைய சில கவிதைகளை அவ்வப்போதைய மனநிலை (Mood) வழிநடத்திச் செல்கின்றன. தென்படும் காட்சிகளில் மனம் திளைக்கிறார். அகத்தூண்டலில் ஓர் மிதவை போல் அல்லாடித் தத்தளிக் கிறார். கவிதைக் கலையில் இது ஒரு முக்கியமான அம்சம் என்றே சொல்ல வேண்டும். அதற்கான தடயங்கள் அவருடைய கவிதைகளில் உள்ளன.

"…. துளித் துளியாய் உயிர்
வழிந்து கொண்டிருக்கிறது
சில மாத காலமாய்
மெழுகுதிரியின் ஒற்றைச் சுடர்
காற்றின் திசைக்கேற்ப
அசைவது போன்று
நிமிடங்கள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன…"

(உயிரின் கடைசித் துளி)

கண்ணாடி நகருக்குள்
நகர்கிறது என் இரவு

(இரவு நகர்கின்றது)

மரங்களின் உயரம் தனைப் பூமிதனில் மடித்து
வைத்திருக்கின்ற நிழலின் ஊடே…
பாசி உடலை மரங்களின் இலைகள்
ஸ்பரிசம் செய்கின்றன…
பச்சை இரத்தம் நீந்தும் காட்டினுள்
நுழைந்து வெளியேறுகிறேன்
தேவதைகளின்
எல்லா வாசனைகளையும் சுமந்து…

(பச்சை இரத்தம் நீந்தும் காடு)

".... ஒரு துண்டு காடாய்
உன் மடியில் கிடக்கிறேன் நான்..."
(ஒரு துண்டு காடு)

அண்மையில் நான் படித்த பல கவிதைகள் பலவற்றில் ஓவியத்தில் வரைந்த மீன் அதிலிருந்து வெளியேறி கடலை உருவாக்கி நீந்துவதையும், பறவை வானத்தை உண்டாக்கிப் பறப்பதையும், சிங்கம் காடொன்றை ஏற்படுத்தி கர்ஜிப்பதையும் அடிக்கடி பார்த்து சலித்து விட்டேன். (ஓவியத் திலிருந்து வெளியேறிய சிங்கம் இந்தக் கவிஞர்களை அடித்துக் கொல்ல வேண்டுமென்பது என்னுடைய மானஸீக பிரார்த்தனை). இந்த வகையறா கவிதையொன்றை (காற்றில் வரையப்பட்ட ஓவியம்) நண்பர் நௌபலும் எழுதிப் பார்த்திருக்கிறார்.

அவருடைய அடுத்த கவிதைத் தொகுதி மேலும் சிறப்பாக அமையும் என்பது என் நம்பிக்கை.

நல்வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன்,
**உமா வரதராஜன்**
*24-02-2017.*

## ஒரு அவதானக் குறிப்பு

பூக்களின் மேல் குந்தியும், எழுந்தும், இருந்தும், பறந்தும் தன் இறக்கைகளை அடித்தபடி வட்டமிட்டும் ஒருபட்டாம் பூச்சியைப் போல, உணர்வு வெளியின் படபடப்பில் சஞ்சரிக்கும் நௌபலின் கவிதைகள், அவர் தம் மனதின் அசைவுகளை அலை வீசும் நேர்த்தியுடன் லயப்படுத்துகின்றன.

காலத்தின் நிகழ்வுகளை வசீகரித்து நிற்கும் இவரது எழுத்துக்கள், ஆங்காங்கே சுயம் சார்ந்த உணர்வுகளுக்குள் தன் அனுபவ முடிச்சுக்களை அவிழ்த்துவிடும் தருணங்கள் அலாதியானது......

தன்னிலை மருவி நிற்கும் இவர் கவிதைகளில் அனேகமானவை காதலையும் அது கொண்ட அபூர்வ உணர்வுகளையும் பிரிவுகளையும் ஏமாற்றங்களையும் விரகதாப விம்மல்களையும் சொல்லுகின்ற போதிலும், சில கவிதைகள் தன் பயண வெளியில், திடுமென மற்றுமொரு திருப்பத்திற்குள் மாறி, முற்றிலும் எதிர்பாராத வேறொரு திசையில் சஞ்சரிப்பதையும், நமது தர்க்க அறிவின் எல்லையை தகர்க்கும் விதமாக காட்சியைப் புலனில் தலைகீழாக்கம் செய்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இது கவிஞரின் ஒரு பரிசோதனை முயற்சியாகக் கூட இருக்கலாம். அல்லது தற்கால நவீன, பின் நவீனத்துவக் கவிதைகளின் தாக்கமாகவும் இருக்கலாம். எப்படிப் பார்த்தாலும் சரி, சமூக வெளியின் பல்வேறு தளங்களையும் தொட்டுச் செல்லும் இவரது கவிதைகளில் அனேகமானவை மாற்றி யோசிக்கும்படியும், அனுபவித்து ரசிக்கும் படியும் நம்மை பரிவுடன் வேண்டிக் கொள்கிறது.

“எனக்குத் தொழில் கவிதை” என்றவன் பாரதி. தான் ஒரு கவிஞன் என்ற இறுமாப்பு அவனிடம் நிறையவே இருந்தது. அந்த துணிச்சலும் ஓர்மையும் இன்னும் தன்னிடம் கைகூடி வரவில்லையே என்ற நௌபலின் ஆதங்கம் நிறைந்த ஒப்புதல் என்னை மிகவும் கவர்ந்தது.

"மொழி பின்னி, கருத்துக்கள் நகர்த்தி
தாளில் படர வைத்தல் என் தொழில்"

எத்துணை தன்னடக்கம் பாருங்கள். "தன் தொழில் கவிதை" என்று இவர் சொல்லவில்லை. இன்றைய அனேக கவிஞர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும்.

அது ஒரு புறமிருக்க 'கவிதை' மீது இவர் கொண்டுள்ள பற்றுதலைப் பாருங்கள்.

"உன்னைப் பிடிக்கும்
உன் கன்னங்கள் உன் கூந்தல்
உன் மூக்கு...
எல்லாமே பிடிக்கும்
உன் அழுகையும்
உன் அழகையும் பிடிக்கும்
என்றாலும்
நீ கவிதை எழுதுவது
பிடிக்காது எப்போதுமே".

இன்றைய வரிமுறிப்பு கவிஞர்களை எள்ளி நகையாடும் இந்த வரிகள் அப்படியே நம்மை அள்ளிக்கொண்டு போகும் விந்தை அலாதியானது.

ஒரு அடியில் இரண்டு மாங்காய்கள்.

இத்தோடு முடியவில்லை. தொடந்தும் விழுகிறது அடி. இன்றைய படைப்பாளர்களின் கேலிக்கூத்துக்கள் கிண்டலும் நையாண்டி யுமாக....

"இவருக்கு அவர்
அவருக்கு இவரென்று
மாறி மாறி போர்த்திக் கொள்ளும்
ஒரு கேலிக்கூத்து..."

இதை வாசிக்கும்போது, இத்தொகுப்பிலுள்ள இன்னுமொரு கவிதையும் ஞாபகத்திற்கு வருகின்றது.

“ஒருவர் முதுகை மற்றவர்
சொறிந்து,
ஒருவருக்கொருவர்
துணையாய் நின்று
வீடு சேர்கின்றனர்
தற்காலப் படைப்பாளிகள்....”

எது எப்படியோ,இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக வைத்து பார்க்கின்ற போது, நௌபல் அவர்களின் எழுத்தில் ‘கவிதை’ தலை நீட்டிப் பார்க்கின்றது என்பது மட்டும் உண்மை.

“ஒருவர் கேட்கிறார்
இது கவிதையா என்று...

எண்ணங்களில்
பெருகி வழிகிறது கவிதை...”

என்ற வரிகளும்,

“சமுகத்தை சீர் செய்கிறது
நல்ல கவிதை ஒன்றின் செல்வாக்கு”

என்று வரும் கவிதையும் இவரது எழுத்தின் அடையாளச்சுட்டிகளாய் நம்முள் பரிமாணம் பெறுகின்றன.

‘போர்க்காடு’ இல் ‘பலஸ்தீன்’ பற்றி நின்று இன உறவின் விசாலிப்பை காட்டுவது போல,

“கனவுகளை
வெளியில் நிறுத்திவிட்டு
உலக நிலைக் கண்ணாடியில்
உயிர்வற்றி புதைந்து போகின்றேன்
கணப்பொழுதுகளில் நான்...
விடுதலைக்கான கனவுகள்
புதையாமல் இருப்பதற்காக...”

என்ற 'சுதந்திர தாகத்தின் மூலம்' உலகம் முழுவதையுமே அவாவி நிற்கும் 'மனிதம்' பற்றியதொரு விடுதலைப் போராளியாக இவர் தன்னை அடையாளம் செய்திருப்பதானது, எதிர்காலத்தில் சமூக முரண்பாடுகளுக்கு அப்பால் நின்று மானுடம் பாடும் ஒரு சுதந்திரப் போராளியாக இவரை இனங்காட்டி நிற்கின்றது.

அண்மையில்தான் கவிதைத் துறைக்குள் காலடி வைத்தார். என்றாலும், நௌபல் அவர்கள் சாமானியப்பட்ட ஒருத்தரல்ல. கடல் கடந்து விருதுகள் வென்றது இவர் பேனா. முப்பத்தாறு மாதங்களில் நான்கு தொகுதிகளின் சொந்தக்காரன். **தமிழ் நாட்டில் 'வைரமுத்து அறக் கட்டளை' விருது பெற்ற இருவரில் ஒருவர். 'மிதக்கும் கனவுகள்' கவிதைத் தொகுப்பிற்காக தமிழகத்தில் பரிசும் விருதும் பெற்றவர்.**

உள்ளூர் கவிஞரெல்லாம் வியந்து நிற்க, உண்மையிலேயே கவிதை உலகில் வலம் வரும் ஒரு அசாதாரண கவிஞன். சூதும் வாதும் தெரியாத மொழியில் தான் சொல்ல வந்ததை கச்சிதமாக சொல்லும் வல்லமை நௌபலுக்கு வாய்த்திருக்கிறது.

ஒரேயொரு குறைதான், தொய்வு தரும் மொழியை சற்று இறுக்கிக் காய்ச்சினால் பாகும் பதமும் சுவைபட கைகூடி வரும்.

ஏற்றுக் கொள்வதும் விட்டுவிடுவதும் அவரவர் தர்மம்.

இந்த உலகின் கவிஞர்களின் கண்களிலெல்லாம் மண்ணைத் தூவி - ஆடு புலியாட்டம் போடும் அந்த மகத்தான கவிதையைச் சிறைப் பிடிக்கும் வல்லமை எங்கள் கவிஞன் நௌபலுக்கு தித்திக்க வேண்டும் என்ற பிரார்த்தனைகளோடு....

அன்புடன்,
**எஸ்.எல்.எம். ஹனீபா**
**ஓட்டமாவடி.**

# நன்றிகள்

எனது மனதின் அகவெளியில் உறைந்து கிடந்த எண்ணங்களை தட்டச்சு செய்ய உதவிய ஐ.எம். முஸம்மில் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - ஓட்டமாவடி) மற்றும் இக்கவிதைகளை பார்வையிட்டு அழகுபடுத்திய ஓட்டமாவடியைச் சேர்ந்த கவிஞர் அல்ஸாத் உசனார் மற்றும் எம்.ஜே. பர்ஸானா பேகம், (அபிவிருத்தி உத்தியோகத்தர்), எஸ். ராஜ்குமார், (அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும் எம்.எஸ்.எம். அஜ்வத் அலி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தரும் கவிஞருமான எம்.பி.எம். அபுல் ஹஸன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் பின்பக்க அட்டையில் என்னைப் பதிப்பிக்க உதவிய ஓட்டமாவடி போட்டோ றியோ உரிமையாளர் இ.எல். முகம்மது மஹ்றூப் அவர்களுக்கு எனது நன்றி. மேலும் இத்தொகுதிக்கு பெருமை சேர்க்கக்கூடிய சிறந்த முன்னுரை ஒன்றை வழங்கிய மூத்த எழுத்தாளர் எஸ்.எல்.எம். ஹனீபா அவர்களுக்கு என் நெஞ்சிலிருந்து வழிகின்ற நன்றிகள்.

கணனி வடிவமைப்பதில் உதவிய ஏ.எச்.எம். பாயிஸ் அவர்களுக்கும், சிறப்புற அச்சுப்பதிவு செய்த அப்னா ஓப்செற் பிறின்ற் உரிமையாளர் யூ.எல். நக்கீப் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

அத்துடன் இத்தொகுதிக்கு அணி சேர்த்திருக்கின்ற உரை ஒன்றைத் தந்திருக்கின்ற பிரபல சிறுகதை எழுத்தாளர் உமா வரதராஜன் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

# பீடிகை

கொன்று குவித்தவர்களுக்கு

தெரியும் தானே

என்ன நிவாரணம்

வழங்க வேண்டும் என்று....

## உள்ளே....


| | பக்க எண் |
|---|---|
| • இரவு நகர்கிறது | 01 |
| • ஒருவரும் வரைந்திராத சித்திரம் | 02 |
| • மனங்கள் | 03 |
| • மழைக்குழந்தை | 04 |
| • காதல் | 05 |
| • என் தொழில் | 08 |
| • பச்சை இரத்தம் நீந்தும் காடு | 09 |
| • பிடிக்கும் | 11 |
| • மெல்லச்சாகும் உயிர்கள் | 12 |
| • சொட்டு ஒன்று, சொட்டு இரண்டு | 14 |
| • ஒரு துண்டு காகிதமும் சில சில்லறைகளும் | 15 |
| • தூண்டிலில் மாட்டிய காதல் மீன் | 17 |
| • கேட்டுப்பார் | 19 |
| • குடிசை | 20 |
| • காதல் பறவை | 21 |
| • மனிதக் குவளை | 22 |
| • தாய்மை | 23 |
| • சுதந்திர தாகம் | 24 |
| • சொற்களின் கருத்துக்கள் | 25 |
| • சொட்டு மூன்று, சொட்டு நான்கு | 27 |
| • நரை விழுந்த புல்லாங்குழல் | 28 |
| • அந்தி அழகு | 29 |
| • அன்பின் மழை | 30 |
| • மனவயல் | 31 |
| • சொட்டு ஐந்து, சொட்டு ஆறு | 33 |

- தாவர மனிதர்கள் 34
- புன்னகை 36
- நேற்றைய பொழுதில் 37
- போர்க்காடு 38
- குளிரின் நிறங்கள் 40
- அவள் வளர்ந்து விட்டாள் 42
- காற்றில் வரையப்பட்ட ஓவியம் 43
- மழைத்துளி 44
- பால்ய கால நினைவுகள் 45
- கனவின் இரகசியங்கள் 47
- எமது மண் 49
- பரிணாமம் 50
- நியாயங்களைத் தேடி 52
- மாமூல் வாழ்க்கை 54
- பேரூந்தின் குரைப்பு 56
- ஒரு துண்டுக் காடு 58
- இரவுப் பொழுது 59
- பாதி மனதுடன் 60
- சொட்டு ஏழு, சொட்டு எட்டு 62
- பெருவெளியில் நீந்திச் செல்லும் மனம் 63
- பொன்னாடை 64
- உருவிய உயிர் 65
- முகப் புத்தகம் 66
- சொட்டு ஒன்பது, சொட்டு பத்து 67
- கனவுத் தொடரோட்டம் 68

- கவிதை படைக்கும் சிற்பி 69
- பல மனம் ஓருடல் 71
- சொட்டு பதினொன்று, சொட்டு பன்னிரெண்டு 72
- கல்லறை 73
- வற்றாத கருவறை 74
- சொட்டு பதின்மூன்று, சொட்டு பதினான்கு 75
- வலிகளின் சுமை 76
- வெறும் பயம் 77
- முன்னோர்களின் தொன்மம் 78
- சிறையில் 79
- சாலைப் பயணம் 80
- கற்பனை 81
- கப்பலும் கவிதையும் 82
- யாசகன் 84
- முரண்களின் மைதானம் 85
- சிறு வயதுப் பாடசாலை 87
- இருள் கவ்விய மழை 89
- கனவும் மனம் 91
- வினைப் பயன் 93
- உயிரின் கடைசித் துளி 95
- பாதையின் முத்தங்கள் 97
- இரவல் மனிதர்கள் 100
- சொட்டு பதினாறு, சொட்டு பதினேழு 103
- சேதாரங்களுடன் பிரபஞ்சம் 104
- கடைசிப் பக்கச் செய்தி 105

பச்சை இரத்தம்
நீந்தும் காடு

# இரவு நகர்கிறது

வெண்ணிற இரவு பரவிக் கிடக்கிறது
இருளின் நடுவில்
பனிப்பேனாவால் இரவை வரைந்து கொண்டு
பகல் நடப்புக்களை அலசிக் கொள்கிறேன்
உணவுகள் விரிந்து கிடக்கின்றன
கோடுகளால் வரையப்பட்ட பாத்திரங்களில்
தேனீர் உறங்கிக் கொண்டிருக்கிறது
சித்திரப் பூக்கள் வைத்த கோப்பைகளில்
உணவின் ருசியினைக்
கடித்து
மென்று
பசியைத் தீர்த்துக் கொள்கிறேன்
ஆடும் வெளிச்சம் மெல்ல மெல்ல
கருகிக் கொண்டிருக்கிறது
இரவை ருசித்தபடி மெத்தையில் நீந்திக்
கொண்டிருக்கும் என்னை
தூக்கம் அழைத்துச் செல்கிறது
இரவில் நுழைவதற்கான
முதலாவது கனவை காண்கிறேன்
கனவின் அந்தரங்கம் அதன் விளிம்பு
தொங்கவிடப்பட்டிருக்கின்றன
இப்போது
கண்ணாடி நகருக்குள்
நகர்கிறது எனது இரவு.

*04-01-2016*

# ஒருவரும் வரைந்திராத சித்திரம்

முன்னைய காலம் ஒன்றில்
அஜந்தா ஓவியங்களில் விரவிக்கிடக்கும்
சித்திரங்களில் அவளும் ஒருவளாகி
முன்னர் ஒருவரும் வரைந்திராத
சித்திரமாகவே அவள் காணப்படுகிறாள்...

அதே ஓவியங்களை
வண்ணத்துப்பூச்சி ஒன்றும்
கூவி விற்றுக் கொண்டிருக்கிறது
சிந்து நதிக்கரையில்

அவளின் புருவங்களில்
மழை பொழிவது
போன்று
காமம் நிரம்பி வழிகிறது
மார்பில் மலைகளை திரைகளாக
நட்டு வைத்துள்ளனர்
தொட்டுபார்க்க முடியாதபடி...

முத்தங்களின் இரகசியங்களை
அச்சித்திரங்கள் அறிந்ததனால்
சித்திரங்களே
முத்தமிட்டுக் கொள்கின்றன தங்களுக்குள்
யாரும் முன் வராததால்...

06-01-2016

# மனங்கள்

கனவுகளை விழுங்கிய மனங்கள்
பாதைகளில் கசிந்து
பெண்ணுடல்களிலிருந்து
வழுகி பொழுதுகளை
ஈரமாக்குகின்றன...
குளிர்காற்று ஓடி அசைந்து
காற்றை வளைத்து
மனசையெல்லாம் மகிழ்விக்க
பிடிவாதம் நிறைந்த மனங்கள்
தன்பாட்டில் வழுகிச் செல்கிறது
தீர்மானங்கள் எதுவுமின்றி...
கோபப்பட்ட மனங்களின் மூர்க்கமெல்லாம்
பயனின்றி பரிதாபமாக சிதறிக் கிடக்கின்றன
சில மனதின் சோகங்கள்
துக்கத்தில் உறைந்து கிடக்கிறன
தட்டி எழுப்பப்படும் வரை...
இறுதியில்
ஒரு பிடி மனது அகப்பட்டுக் கிடக்கிறது
என் கைகளுக்குள்
பொறுமையாக!

*11-01-2016*

## மழைக்குழந்தை

வானத்தின் சூட்டில
கரு முகில் சூல்களெல்லாம்
கடலுக்கும் வானத்துக்குமிடையிலான
துதிக்கை லிங்கத்தால்
புணரப்பட்டு
கர்ப்பமடைந்து
மழைக் குழந்தைகளை
பிரசவிக்கின்றன
மேகங்களெல்லாம் தயாராகுகின்றன
அடுத்த பிரசவத்திற்கு...

*01-02-2016*

## காதல்

இதயத்தில் இருந்து ஊற்றெடுக்கின்றது
எல்லா இடங்களுக்கும் ஊடுருவக்கூடியது
அது காற்றிடைவெளி போன்றது
நதி போன்று பல யுகங்களுக்கும்
நீந்தக்கூடியது
உயிர்களோடு பேசக்கூடியது
இறுகிய இதயங்களை
தட்டித் திறக்கக்கூடியது...

துளிகளாகப் பிறந்து
மழையாகப் பொழியக்கூடியது
துடிக்கும் இதயங்களாக வாழக்கூடியது
அழகானது
இரம்மியமானது
பரவசப்படக் கூடியது
மாலைப் பொழுது போன்றது
வாழ்வின் இருப்புக்கு காரணமானது
புகழப்படக்கூடியது
பத்திரமானது...

காதல் வசப்பட்ட மனதுகள் பரந்து
கிடக்கின்றன பூமியில்
ஒற்றைக் காதலில் சில மனதுகள்
இரட்டைக் காதலில் பல மனதுகள்
பல் பக்கக்காதலில் இன்னும் சில

காதல் வந்தால்
மனதுக்குத் தெரிவதில்லை அது
படிப்படியாகப் புரியத் தொடங்கிவிடும்
பின்னாட்களில்...

பார்வையில் தெரிந்து வரும்
சைகைகளினாலும் புரிந்து விடும்
அடக்கியும் வாசிக்கும்
சில நேரங்களில்

காதல் வந்தால்
படபடப்பு வந்து
அகமும் புறமும் கொந்தளிக்கிறது
பின்னர் சூடு தணிந்து வெற்றியடைகிறது
அது குதூகலித்து கொண்டாடுகிறது...

சில காதல்கள்
காதல் வடுக்களோடு
ஆயுள் முழுவதும் அதனை நினைத்தே
வாடிக் கிடக்கிறது...

சில காதல்கள் ஆயுள் வரையும்
அதற்கு அப்பாலும்
மகிழ்ச்சியைக் கொடுக்கும்

இன்னும் சில வடுக்களோடு
மரணம் வரை துன்பங்களை சுமக்கும்
இன்னும் சில காதல்கள்
நம்மை உசுப்பேற்றி
தோல்வியை அருந்தச் செய்யும்

சில காதல்கள்
நம்மைக் கடந்து செல்லும்
விரைவாய்...
நமக்கே தெரியாமல்...

சில காதலுக்கு சாதாரண வைத்தியமும்
பல காதலுக்கு
அதிர்ச்சி வைத்தியமும் கொடுத்து
வெற்றி பெறச் செய்கின்றனர்
மொத்தத்தில்
வெற்றி பெற்ற காதல்
ஆகாயத்துக்கும் பூமிக்கும்
இடையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது...

அதனால்
காலத்தால் அழியாமல்
பல ஆண்டுகள் பேசப்படக்கூடியது
உலகின் அடிப்படையாதலால்
வெல்ல முடியாதது
மரணத்தாலும்...

அடைய முடியாத காதலே
கவர்ச்சியானது
ஏனெனில்
உலக முடிவுவரை
அது பேசப்படுவதனால்.

# என் தொழில்

மொழி பின்னி கருத்துக்களை நகர்த்தி
தாளில் படர வைத்தல் என் தொழில்
அகக்கிளர்ச்சியை தூண்டி
அதனை வெளியில் எடுத்து
பாடு பொருட்களுக்குள்
உள்வாங்குதல் எனது வேலை
ஞாபகப் பெட்டிகளை
குலைத்து அடுக்கி
தகவல்களை தேவைக்கு
பயன்படுத்துதல் மற்றுமொரு தொழில்
மொழி விதையை உடைத்து நவீனத்தை
முளைக்கச் செய்தல் இன்னுமொரு வேலை
மொழிக்குள் உறைந்து கிடக்கும்
நிலத்தின் மேல் முளைத்த நகரங்களை
காட்சிக்கு
கொண்டு வருதல் எனது
மற்றுமொரு கடமை
கண்ணாடி வயல்களில் நீந்திக் கொண்டிருக்கும்
மொழியின் மேன்மையை
வெளிக் கொண்டு வருவது மற்றுமொரு தேவை
தொழிலில் மொழி நீந்துகின்றது
கவிதையாக
ஒவ்வொரு பொழுதிலும்...

***07-01-2016***

# பச்சை இரத்தம் நீந்தும் காடு

மரங்களின் உயரம் தனை பூமி தனில் மடித்து
வைத்திருக்கின்ற நிழலின் ஊடே
நடந்து செல்கிறார்கள்
தேவ கன்னிகள்...

அலை அலையாய் நெளிந்த கூந்தல்
அசைந்து விரிகிறது காற்றினூடே
கடி எறும்புகளின் காலடி ஓசைக்கு
அமைந்து அடிகள் மெல்ல நகர்கின்றன
மரங்களினூடே...
அழகை சால்வையில் சுற்றி
மறைத்திருக்கிறார்கள்
தங்கள் மேனிகளை...

பார்வையை கனிகளில் சொருகி
உதடுகளால் பசியாறி
புற்களின் நுனிகளின் வெண்பனி
குலையா வண்ணம்
நகர்ந்து செல்கின்றனர்...

சில விருட்சங்களின் நிழல்களும்
நீரின்மீது
மிதக்கின்றன அந்தக் காட்டினில்
பாசி உடலை மரங்களின் இலைகள்
ஸ்பரிசம் செய்ய
அழகை இரசித்து இலைகளும் கனிகளும்
மகிழ்ச்சி பிரவாகம் புரிகின்றன...

பச்சை இரத்தம் நீந்தும் காட்டினுள்
நுழைந்து வெளியேறுகிறேன்
நான்...
தேவதைகளின்
எல்லா வாசனைகளையும் சுமந்து...

05-01-2016

ஓசை எட்டு

# பிடிக்கும்

உன்னைப் பிடிக்கும்
உன் கன்னங்கள்
உன் கூந்தல்
உன் மூக்கு
உன் உதடு...
எல்லாமே பிடிக்கும்
உன் அழுகையும்
அழகையும் பிடிக்கும்
உன் சமையலும் பிடிக்கும்
என்றாலும்
நீ கவிதை எழுதுவது
பிடிக்காது
எப்போதுமே...

*09-01-2016*

ஓசை ஒன்பது

# மெல்லச்சாகும் உயிர்கள்

நேற்றைய தினசரிகளை
மேய்ந்த கண்கள் உலர்ந்து கிடக்கிறது
வன்ம மாயைகளின் மத்தியில்...
மெல்ல உணரும் மனங்கள்
செய்திகளின் சுமை தூக்க முடியாமல்
துவண்டு போகின்றன
தொப்புள் கொடியும் விசமாகிறது
ஆரம்பத்திலேயே மனிதர்களுக்கு
பின்னர் உடல் முழுவதும்
தவணை அடிப்படையிலும்
கலந்து விடுகிறது பல விதங்களில்
உயிர் கொல்லி மருந்துகள்
உடலில் சென்று வேர் விட்டு
பூத்துக் குலுங்குகிறது பலாத்காரமாக...
சின்னஞ் சிறிய பூச்சிகளும் தமது
சொண்டுகளிலிருந்து
விதிகளை எழுதிச் செல்கின்றன
மெல்லச்சாகும் சூத்திரங்கள்
நாடுகளுக்குள் ஊடுருவியிருக்கின்றன
ஆயுதங்களில் தப்பிய உயிர்கள்
விசச் சுழலில் சிக்கி மெல்லக் கரைகிறது

மெல்லப் பரவும்
விசங்களைப் பாய்ச்சி
மேனிகளில்
மென்மை சேர்க்கின்றனர்
படிப்படியாக...
மெல்லப் பறக்கும்
பூச்சிகளுக்கும் பறவைகளுக்கும்
நாசினிகளை மூக்கில்
தேய்த்து விடுகின்றனர்
மனிதர்களுக்கும்
சில நேரங்களில்...
உயிர்களின் மீது விசம் கோபம் கொண்டு
பரவிக்கிடக்கிறது
விஷங்களால் நிறையும் பூமி.

## சொட்டு ஒன்று

அவளின் கூர்மையான
பார்வைகளால்
வெட்டி சாய்த்துக்
கொண்டிருக்கிறாள்
ஒவ்வொரு பொழுதையும்...

## சொட்டு இரண்டு

சிரித்த முகத்துடன் நகரும்
அவளின் நிழல்கூட
சிரித்துக் கொண்டு தான்
நகர்கிறது...

# ஒரு துண்டு காகிதமும் சில சில்லறைகளும்

புலரும் பொழுதொன்றின் இடுக்கில்
மயங்கிய கனவின் படுக்கையில்
மிதந்து கொண்டிருக்கிறான் ஒருவன்
சூரியனின் மழை நீர் உலகமெங்கும்
பெய்யத் தொடங்குகிறது
ஆடையற்ற தேகத்தைக்
காற்றால் நனைத்து
நாற்றங்களை பின்னால் தள்ளி
நடக்கத் தொடங்குகிறான்
உயிரைக் கையில் பிடித்தபடி...

சூரிய கதிர்கள் ஒழுகும்
காலையின் பெரு வெளியில்
அவனது மனம் பரவிக்கிடக்கிறது
சாலை ஓரங்களில் முளைத்திருக்கும்
வீடுகளின் பின்னால் காகங்களின்
அரவம் நீந்திக் கொண்டிருக்கிறது

இசை ஒன்றின் ஓசையின் இடுக்கில்
அவனது பயணத்தின் பாதை
நீண்டு கிடக்கிறது குறிக்கோளில்லாமல்
பேராசை அவனுள் புதைந்து கிடக்க
சின்னச் சின்ன ஆசைகளை
பெருவெளியில் மிதக்க விட்டு
முகத்தின் சுருக்கங்களில் பல கதைகள்
சொல்லி நிற்கிறது...

மனக்குழந்தையையும் தன்னுடன்
அழைத்துச் செல்கிறான் உதவிக்காக...

ஒரு துண்டு காகிதமும்
சில்லறை காசுகளும்
மிதந்து கொண்டிருக்கின்றன
காற் சட்டைக்குள்...

07-02-2016

## தூண்டிலில் மாட்டிய காதல் மீன்

இந்த இரவு
இன்றைய கனவுகளுக்கானது
உன் கண்களில் நிரம்பியிருக்கும்
காதலில்
நான் நீந்தி
கரையேற வேண்டும்

அங்கே
தென்றல் ஒரு பாடல் பாட
வண்ணத்துப் பூச்சிகள் நடனமாட
ஆட்டத்தின் நிழலில்
உட்கார்ந்து களைப்பாற வேண்டும்
ஆடை போடாத முத்தங்களை
காதல் நதியில்
தெளிக்க வேண்டும்

அந்தப் பாடலில் இருந்து வெளியாகும்
கொடி மல்லிகை மணத்தை சுவாசித்து
உன் காதலை அள்ளி
உடலெல்லாம் பூச வேண்டும்
காதல் மீனுக்கு தூண்டில் போட்டு
என் உடலில் நிறைக்க வேண்டும்
உன் கண் வழி உதிரும்
காதல் பதிவேட்டில்
என்னைப் பதிய வேண்டும்
முடிவில்
உன் கன்னங்களிலிருந்து வீசும்
காதல் பூங்காற்றில்
உலர்ந்து போக வேண்டும்...

காதல் வற்றாத கண்கள்.

*13-02-2016*

ஓசை பன்னிரெண்டு

## கேட்டுப்பார்

சிறகு முளைக்காத கடலும்
முந்தானை போடாத வானமும்
பறக்கத் தெரியாத காற்றும்
குருடு நிறைந்த வெளிச்சமும்
பகல் போன்ற இரவும்
பள்ளம் நோக்கி ஓடாத ஆறுகளும்
எனக்குச் சொந்தமில்லை
கேட்டுப்பார்
இறைவனிடம்.

*03-02-2016*

ஓசை பதின்மூன்று

## குடிசை

பெரு வெளியின் வெளிச்சங்கள்
கூரையின் மீது இறங்கி
தெளித்து கிடக்கின்றன...
மழைத் துளிகளும் கூரையில் விழுந்து
வெள்ளிச் சிதறல்களாக பரந்து கிடக்கின்றன
மெல்ல மெல்ல அசையும் காற்றும்
குடிசை முழுவதும் நிரம்பிக் கிடக்கிறது...
சந்தோசம் குமைந்து கிடக்க
சிறியதும் பெரியதுமான உயிர்கள்
குதூகலித்து கொண்டாடுகின்றன
கிழிந்தல்களுடன்...
வெளிச்சங்கள் மழைத்துளிகள்
உயிர்களும்
உள்ளேயும் வெளியேயும்
நிரம்பி கிடக்கின்றன வித்தியாசமில்லாமல்
குடிசையில்
பெருகி வழிகிறது இன்பம்.

*06-03-2016*

# காதல் பறவை

கண்களில் நுழைந்து
இதயத்தில் ஓரிடத்தைக் கைப்பற்றி
குடியேறுகிற உயிர்
மனத்தின் படிக்கட்டுக்களில்
வழுக்கி வழுக்கி ஏறிக்கொண்டிருக்கிறது
பனி படர்ந்த நெஞ்சத்தின்
விரண்டு போன மனக் குழந்தைக்கு
விரல் பிடித்து வரைந்து
காட்டுகிறது காதல் பாடத்தை...
கண்களால் கல்லறை கட்டி
மனதில் மிதந்து கொண்டிருக்கும்
காதல் கதகதப்பை
விரல் தொட்டு
வளைத்துக் கொள்கிறது அது...
இதயத்தின் வெறுமைகளை
அந்தரத்தில் வீசி
நீர் கொண்டு பாய்ச்சி
காதல் மரம் முளைப்பதற்கு உதவுகிறது
பனியாக சாய்ந்திருக்கும் அந்த உயிர்
சிறகு முளைத்துப் பறக்கத் தொடங்குகிறது
இப்போது...
இதயத்தைப் போல் உடலையும்
தாங்கிச்செல்கிறது காதல் பறவை
பிரியத்தின் துளிகளோடு
தொட்டுணரும் காதல் பிறந்திருக்கிறது
என்னுள்ளே...
சிறகு முளைக்கிறது
உறங்கியிருந்த காதலுக்கு.

*03-03-2016*

## மனிதக் குவளை

மனிதக்குவளை என அடுக்கி
வைக்கப்பட்டிருக்கின்றேன் நான்
மனக்கடல் அதனுள் பூட்டப்படடிருக்கிறது
நினைவின் அடுக்குகளும்
கொட்டப்பட்டிருக்கின்றன
நிறம் பூசிய தண்ணீரால் நிரப்பி
வாசல்கள் வைத்த
காற்றூதிய பந்தாக
மிதக்கிறேன் உலகக் கடலில்...
அமைதியையும் அன்பையும்
குடியேற்றியிருக்கிறான் இறைவன்
கோபம்
குரோதம்
துரோகம்
என்பன மண்டியாக
படிந்து கிடக்கிறது
அதன் வாசல்களில்...
பொறாமை என்னும்
கூர்வாளை சொருகி
பாய்ச்சியும் விடுகின்றனர் என் மீது
சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம்...
குவளையில் பெருகி வழிகிறது வாழ்வு.

*27-02-2016*

## தாய்மை

ஆயுள் ரேகை அவளின் காலடியில்
உறைந்து கிடக்க
மரத்தின் கிளையென கைகளில் அமர்ந்து
ஆடுகின்றன என் சிறகுகள்...
எச்சிலில் ஊதிப்பழுக்க வைத்து
எனக்கு ஊட்டுகிறாள் தினமும்
தரையில் மிதக்கும் என்னைப் பரிசீலித்து
தேய்ந்து போகிறாள் நித்தமும்
அவள் கண்களில் புன்னகை உதிர்ந்து
அன்பை வெளிப்படுத்தி
முத்தங்களை சொரிகிறாள் என் சிரிப்பில்
காலத்தை முந்திய ஓட்டமும் நடையும்
தாய்க்கும் சேய்க்கும் இடையில்...
இரத்தத்தை உருக்கி நீராய் உறுஞ்சுகிறேன்
தினமும்
அவளுக்குள்ளேயே புதைந்து கிடக்கிறேன்
காலம் முழுவதும்
அவள் கண்களில் நிறைந்து
காலடியில் சுருண்டு கிடக்கிறது வாழ்க்கை
உயிரும் அவளிடம் தான்
உறைந்து கிடக்கிறது
பாசத்தில் கட்டுண்டு.

*01-04-2016*

ஓசை பதினேழு

## சுதந்திர தாகம்

கனவுகளை
வெளியில் நிறுத்தி விட்டு
உலக நிலைக்
கண்ணாடியில்
உயிர் வற்றி
புதைந்துபோகிறேன்
கணப்பொழுதுகளில் நான்
விடுதலைக்கான கனவுகள்
புதையாமல் இருப்பதற்காக...

*02-04-2016*

# சொற்களின் கருத்துக்கள்

காலத்தின் அருமை சொல்லி
சொற்கள் விரிந்து
காலம் கசிந்து ஓடுகிறது உதடுகளில்
உயிர் எழுத்துக்கள் துள்ளிக் குதித்து
குதூகலித்துக் கொண்டாடுகிறது ஏடுகளில்
வாக்கியங்களில் உட்காரும் கருத்துக்கள்
மனங்களில் மிதந்து உருமாறுகிறது
கோப்புக்களில் சுருண்டு கிடக்கும் எழுத்துக்கள்
மடித்து வைக்கப்பட்டிருக்கிறது
எடுத்து வாசிக்கப்படும் வரை
சாய்ந்து கிடக்கும் எழுத்துக்கள் உயிர் பெற்று
கருத்துக்களை பகிர்ந்து
சொற்களில் ஒழிந்து கிடக்கும் இருள்
வெளியேறுகிறது
வாசகனின் பார்வை பட்டதும்...
ஒற்றைச் சொற்களில்
பலபொருள் வடிவங்களாக
அலைந்து திரிகிறது சில புத்தகங்களில்...
வாக்கியங்களில் அலையும் சொற்கள்
மொழிப்பின்னலில் கரைந்து
சொற்களின் பின்னால்
காலம் கலந்து
கிடக்கிறது
புத்தகங்களில்...

ஏட்டின் மடிப்புகளில் உருளும் காற்றின் சுருளி
முத்தாக மாறி
வாக்கியங்களில் அமர்ந்து
தகவல் தருகிறது…
பதிவுகளில் மறைந்து கிடக்கும்
உண்மைகள்
சொற்களில் சிதறிக் கிடக்க
இறுதியில் அரூபம் கொண்ட சொற்கள்
வாழ்க்கையாகிறது.

*19-03-2016*

## சொட்டு மூன்று

வலசை மேற்கொள்ளும்
வண்ணத்துப் பூச்சிகள் போன்று
மனிதர்களும் இடம்பெயர்ந்து
போகின்றனர்
காலநிலை மாற்றத்தால்...

## சொட்டு நான்கு

முகத்தில் சொருகி வைத்திருக்கும்
அழகையெல்லாம்
குலைத்து அடுக்கிக் கொண்டிருக்கிறாள்
ஒவ்வொரு காலையிலும்...

# நரை விழுந்த புல்லாங்குழல்

அதிசய நதி
நெஞ்சில் இருந்து
வழிந்தோடி நரை விழுந்த
புல்லாங்குழலை தழுவிச் செல்கிறது

இசை ஒழுகுவது போன்று
உணர்வுகளும் வழிந்து
இளமையின் அற்புதங்களில் நனைந்து
அசைகிறது புல்லாங்குழல்
அந்தியின் உணர்வுகள்
மூப்படைந்த புல்லாங்குழலை
உரசி
நினைவுகளையும்
சலனங்களையும்
நனையச் செய்கிறது அது
நிசியின் பிரசன்னமாய்
நெஞ்சுக்குள் நீந்தும்
இள உணர்வுகளுக்கு
புத்துயிர் கொடுக்கிறது...
முடிவில்
விம்மி குடை பிடிக்கிறது
நரை விழுந்த புல்லாங்குழல்.

*21-03-2016*

# அந்தி அழகு

பகலின் மீது இரவு பயணிக்க முற்படுகையில்
சூரியன் ஓய்வெடுக்கத் தயாராகின்றான்
வானத்திரையில் பல பேர் சேர்ந்து
செந்நிற ஓவியங்களை வரைகின்றனர்
இதுவரை
வானத்தை வசிப்பிடமாக்கிய
பறவைகள் தத்தம்
கூடுகளை நோக்கி விரைகின்றன
சுடும் காற்று தன்னை
குளிராக்கிக் கொண்டிருக்க
ஆழ்ந்த உறக்கத்திலிருந்த ஊர்வனங்கள்
விழித்துக் கொள்கின்றன...
இறுதியில்
காலம் இடம் மாறி நகர்கிறது...
மற்றுமொரு துண்டு நாள்
கழிந்து போகிறது இரக்கமில்லாமல்
அந்தியின் அழகில்
மயங்குகிறேன் நான்...

24-04-2016

# அன்பின் மழை

கடைக்கண் பாய்ச்சல்களை கைகளால்
கைது செய்து
சிறையில் அடைக்கின்றேன்
தினமும்
மெட்டிகளின் சிணுங்கல்களையும்
சித்திரங்களாக
வரைந்து கொண்டிருக்கின்றேன்
வலிகளை விழுங்கிய அவளின் மௌனங்களை
இழுத்து வருகிறேன் வீடு வரை...

புன்னகைக் குவியல்களையும்
கோவை செய்து நாளேட்டின்
நடுவில் சொருகிக் கொண்டிருக்கின்றேன்
அன்பின் குளிரில்
குறித்து வைத்து கொடுக்கப்படும்
முத்தங்களின்
பொழுதுகளை மடித்து
எண்ணிக் கொண்டு
தரவேண்டிய முத்தங்களை எண்ணி
தனிமையில் பூத்துக் கிடக்கின்றேன்...

*20-04-2016*

# மனவயல்

மனதின் பெரு வெளிகளில்
நதியாய் பெருக்கெடுத்து
நிழல் படமாய் உறைந்து கிடக்கின்றன
எண்ணங்கள்

சிந்தனை வலைகளாகப் பின்னப்பட்டு
மூளையின் இடுக்குகளில்
பரவிக்கிடக்கின்றன...

நினைவின் அடுக்குகளில்
மலை போல் குவிந்து கிடந்து
விதியை வாசிக்கின்றன விருப்பங்கள்...

காலத்தின் கரங்களை உடைத்து
மனவயல்களில்
விதைக்கப்பட்டு முளைத்த மரங்கள்
வானத்தை தொடும் வரையிலும்
நீண்டு கிடக்கிறது ஏடுகளில்
வாசனை பரப்பி...

சிந்தனையின் மாய வலை
உடல் முழுவதும் பரவி
வார்த்தைகளின் வடிவிலும்
எழுத்துக்களாகவும் கொட்டிக்கிடக்கின்றன

தூரிகையால் வரையப்படும்
சிந்தனை எண்ணங்கள்
வாழ்வின் பக்கங்களை
கடந்து செல்கின்றன...

வண்ணத்துப் பூச்சிகளின் இரட்டைச் சிறகுகள்
வெள்ளிப் பனித்துளிகளில் சிறகடித்து
வர்ணம் பூசி மிதந்து கிடக்கின்றன
மனதின் பெரு வெளிகளில்...

மன வயலின்
வெள்ளைப்பூ தெருக்களில்
கருத்துக்களைப் பாடி
விற்பனை செய்ய
மீதி மண்டியாய் உறைந்து கிடக்கின்றன...

முடிவில்
சிந்தனையின் கீறல்கள் காற்றலைகளாய்
பரவிக்கிடக்கின்றன மனவயலில்
மீண்டும் முளைப்பதற்கு...

15-04-2016

## சொட்டு ஐந்து

சிந்திச் சென்ற
சில்லறைச் சிரிப்பையெல்லாம்
பத்திரமாக சேர்த்து வைத்திருக்கிறேன்
கேட்கும்போது திருப்பித் தருவதற்கு

## சொட்டு ஆறு

நிமிர்ந்த தேகமும்
குவிந்த புன்னகையும்
கவிந்த அழகும்
மறைந்த காமமும்
விரிந்து கிடக்கிறது
அவனின் அரூப உடலில்

## தாவர மனிதர்கள்

புவியில் முளைத்த தாவர மனிதர்கள்
பரவிக் கிடக்கின்றனர்
நிர்வாண புல் வெளிகளில்...
தாகம் தீர்க்கும் நீரை
நரம்புகளில் பச்சையாக ஊற்றி
இலை உதடுகள் வழியாக
வெளியேற்றுகின்றனர்
சூரியன் உதவியால்
காற்றின் பக்கங்களில்
சாய்ந்து நடனமாடும் பூவின்
வாசங்களைப் பரப்பி
வலை விரிக்கின்றனர்
வண்டுகளின் வரவுக்காய்...
தாவரப் பெண்கள் தங்கள் கிளைகளில்
பழங்களை தொங்க விடுகின்றனர்
தொடு விரல் தூரத்தில்...
நிர்வாணக் கோலத்தில் காற்றின்
விசைக்கேற்ப பாடலை தந்து
குருவிகளின் அடைக்கலமாய்
பரந்து கிடக்கின்றனர் அவர்கள்
மேனிகளில் விரும்பிய
பல் நிற தோல் அணிந்து பவனி
வருகின்றனர்...

உறவுக்கு புழுக்களை தம்மில் படர விட்டு
அழகு பார்த்து மேய விடுகின்றனர்
காலடியில் தானாய் தோன்றும்
உறவுகளை தன்மீது படர விட்டு
அழகு பார்க்கின்றனர்
மண் பிரித்து விதை அறுத்து
பூமி மடிப்பில் வேர் விட்டு
மெலிந்த இலைகளால்
அலங்கரிக்கப்பட்டிருக்கின்றனர்...
பல சேர்
இன்பம் தரும் தாவர நகரம்
இந்த உலகம்.

*10-09-2016*

## புன்னகை

ஓர் அலங்காரப் பொருள் புன்னகை
நேர்த்தியான அணிகலன் அது
சமூகத்தில் உலாவுவதற்கான
ஒரு குறியீடு...

உறங்கியும் சிரித்தும் கிடக்கிறது
அனேகரின் வதனங்களில்
முகத்தின் ஓரங்களிலும்
சரிந்து கிடக்கும் சில நேரங்களில்...

சிறியதும் பெரியதுமான புன்னகை
நிமிர்ந்தும் விரிந்தும்
பரவிக்கிடக்கும்
பல நேரங்களில்...

இரவல் புன்னகையும்
கட்டாயப் புன்னகையும்
சலித்துக் கிடக்கும்
வார்த்தைகளின் முகங்களில்...

ஆனால்
பணி நிமித்தம் பிரிபவர்களுக்கு
உணவுப் பொட்டலத்துடன்
எஞ்சிய புன்னகையையும் சேர்த்து
பிணைத்து விடுவர் இல்லத்தரசிகள்...
அவிழ்க்கும் போது
புன்னகை தான் முதலில் வெளியேறும்
சிரித்துக்கொண்டு...

*12-03-2016*

ஓசை இருபத்தைந்து

## நேற்றைய பொழுதில்

பகலின் வெளிச்சங்களில்
பரவிக்கிடக்கும் எண்ணங்கள்
ஒட்டிக்கொண்டிருக்கின்றன
வெவ்வேறான முகங்களின் குறியீடுகள்
மனதின் சுவர்களில் படிந்திருக்கின்றன
நேற்றைய பொழுதினில்...
கேட்ட ஒலிகளெல்லாம்
காதுக்குள் ரீங்காரம் செய்கின்றன
பேசிய சொற்களும் எதிர்ச் சொற்களும்
வரி வரியாய் பதியப்படுகின்றன இதயத்தில்
பார்த்த செய்திகளெல்லாம்
படமாக விரிகின்றன...
குலைத்து அடுக்கி வைக்கின்றேன்
என் மனதினை
அதிகாலைப் பொழுதில்
நாளையை எதிர்கொள்வதற்காக.

09-04-2016

## போர்க்காடு

கரிய நிறம் உதிர்த்த
வெள்ளைப் பொழுதுகள்
இரத்தங்களில் உறைகின்றன...
வழமை போன்று கால்கள் முளைத்து
அலைந்து திரிகின்றன ஆயுதங்கள்
குறுக்கு நெடுக்காக
பாலஸ்தீன மண் முழுவதும்...
மண்ணைத் துன்புறுத்தி
இன்பம் காணும் குண்டுகள்
குருதிகளில் குளித்து
எக்காளமிடுகின்றன
குருதியின் வாசம் பரவ
மாலைப் பொழுதுகள்
ஆயுதங்களின் மீது
உறங்கிக் கொண்டிருக்கின்றன...
பாலஸ்தீன மண்ணின்
கொடுமைகளை முணுமுணுத்தபடி
சலித்து இரைந்து செல்கின்றன
ஆளில்லாக் குருவிகள்
இரைகள் தேடி...
சொந்த நிலத்தில் வாயடைத்து
மௌனிகளாக
பொம்மை உடல்களில் நிறைந்திருக்கின்றனர்

யுத்த பாடங்களை
படித்துக் கொண்டு சிறைக்கு
உள்ளேயும் வெளியேயும் சிறுவர்கள்
பல நேரங்களில் மயானங்களிலும்...
நெருக்குவாரங்கள் மனிதர்களின்
தோள்களில் ஏறி
குதூகலித்து கொண்டாடுகின்றன...
பாலஸ்தீன மக்களின்
வாழிடம் அழிக்கப்படுவது கண் முன்னே
நிதர்சனமாக கழிந்து செல்கிறது
வெள்ளையர்கள் முக்கிய பாத்திரங்களில்
நடித்து
அறபிகளின் தலைவர்கள்
எடுபிடிகளாக
காட்சி தருகின்றனர் நிதர்சனத்தில்...
கொடுமையின் அழகினை
வரைந்து கொண்டு
வானோர் இறங்கி வருகின்றனர்...
வெற்று வார்த்தைகளை ஆடைகளாக
அணிந்து கொள்கின்றன பேச்சுவார்த்தைகள்
சந்தோசம் தாளில் உறங்கியிருக்க
நிம்மதி மண்ணுக்குள்
புதைந்து போகிறது
ஒவ்வொரு பொழுதிலும்...
உயிர்த்துளிகளை காற்றுவாள் கொண்டு
வெட்டுகிறான் இறைவன்.

ஒற்றைக்காலில் நிற்கிறது போர்...

*05-04-2016*

ஓசை இருபத்தியேழு

## குளிரின் நிறங்கள்

கடுங்குளிரில் தனிமையில் விழித்திருக்கும்
தாவரங்கள்
நிரம்பி வழிகின்றன மலைச் சரிவுகளில்
குளிரின் கூட்டில் அவைகளின் காலம்
விலகி நகர்வது தெரிகிறது அவைகளுக்கு...

ஒப்பற்ற இருட்டில் தாவர இலைகளில்
பனிக்குஞ்சுகள் குந்தியிருந்து உடையக்
காத்திருக்கின்றன
வெளிச்சம் வரும்வரை...

கிளைகள் குனிந்து கண்களில்
நீர் வழிய புலம்பி நிற்க
பூமி பிளந்து ஓடும் நதி
கல்லாய் வாடிக் கிடக்கிறது

இருள் சூழ் கொள்ள
வெள்ளிப் பாத்திரங்களில்
மிருகங்களின் நடமாட்டம் விரிகிறது

பல வித உருவங்களில்
குளிர் குன்றுகள் குந்தியிருக்கையில்
தரையின் மீது
கண்ணாடி குளிரில் நெடிதாய்
நிறுத்தப்பட்டுள்ளன மரங்கள்

மலையிலிருந்து சரிந்து கொண்டிருக்கும்
நதிகளின் கரையிலுள்ள நீர் விரிப்புக்களில்
இதழ் வைத்துப்
பருகிக்கொண்டிருக்கின்றன உயிரினங்கள்

தீராமல் ஒளிர்ந்து கொண்டிருக்கும்
வெளிச்ச வீட்டில் நீந்திக் கொண்டு
பனித்துளிகளில் மயங்கி
நானும் லயித்திருக்கிறேன்
அந்நியனாய்...

*02-05-2016*

# அவள் வளர்ந்து விட்டாள்

பருவகால நீரோட்டத்தில் மிதந்து
மனம் உதிர்ந்து புதிய மனம் பிறக்கிறது
பொழிந்து கழியும் கதைகளை
உணர்வில் கலந்து
புதிது புதிதாக தன் உடலைப் பார்த்து
புதுவித இரத்தம் ஓடுவதை உணர்கிறாள்
வாழ்க்கைப் பெட்டியின்
சாவியைத் தேட முற்படுகிறாள் புதிதாக
முன்னைய பொழுதுகளில் தாயோடு
புதைந்திருந்தவள்
பிரிய முனைந்து கொண்டிருக்கிறாள்
இப்போது...
தாயின் அரவணைப்பில் உறங்கியவள்
காற்றினைப் போர்வையாக்கி
தூங்கச் செல்கிறாள் தனிமையில்
பருவம் எய்திய மௌனத்தால்
ஒவ்வொரு பொழுதும்
புதிதாய் பிறப்பது போல் உணர்கிறாள்
அவளது பொன் வதனம் மாற்றம் காண்கிறது
ஒவ்வொரு பொழுதிலும்...
அவளுக்குள் அவள் வளர்ந்து விட்டாள்
சுட்டித்தனம் குறுகி
அமைதி படர்ந்திருக்கிறது அவளது தேகத்தில்
சிறிய புன்னகை
கடைக்கண் பார்வை
மனதில் ஒரு ஏக்கம் என்பன
அவளிடம் கலந்திருக்கிறது இப்போது
மயங்குகிறாள் தனக்குள்ளேயே!

28-04-2016

# காற்றில் வரையப்பட்ட ஓவியம்

காற்றில் வரையப்பட்ட ஓவியம் ஒன்றை
நீர்த்துளிகளால் ஆக்கப்பட்ட தூரிகை
கொண்டு நிறங்களை இடுகிறேன் நான்

அந்தரத்தில் பறக்கும் குருவிகள் சில
ஓவியங்களாகின்றன அதில்
சிறு பூச்சி ஒன்றும் உறைந்து கிடக்கிறது
சித்திரத்தில்
மீன்களும் நீந்திக் கொண்டிருக்கின்றன
ஓவியத்தின் பின்னணியில்...

காற்று தன்பாட்டில்
அசைந்து கொள்ள
நிறங்களுக்கடியில்
வானவில்லும் மின்னி மறைகிறது அதில்...
தேவதைகளின் வாசமும்
நிரம்பியிருக்கிறது
ஓவியம் முழுவதும்...
நிறங்களின் கவர்ச்சியில்
வண்டுகளும் ரீங்காரமிடுகின்றன
பறவைகள் பறந்தபடி பறக்கின்றன
அசையும் அவளின் ஒற்றை முடி
ஓவியத்திலிருந்து வெளியேறி
முத்தமிட வருகிறது
எனை நோக்கி.

# மழைத் துளி

பறவையின் கீதங்களில்
துளிகள் ஒவ்வொன்றும் நனைகின்றன
காற்று
மழையின் இடைவெளிகளை நிரப்புகிறது
துளிகள் ஒன்றுடன் ஒன்று சம்பாசித்து
கரைந்து போகின்றன
பெரு வெளிகளில்...
காற்றின் விளிம்புகளில்
வண்ணத்துப் பூச்சிகள் அமர்ந்து
ஒவ்வொரு துளியையும்
இரசிக்கின்றன
அனைத்துப் பறவைகளும்
கூடு சேர் நிலை மறந்து
துளிகளை முத்தமிடுகின்றன...
தாவரங்களை முத்தமிடும்
ஒவ்வொரு துளியும்
சிதறிக்கிடக்கிறது அதன் கைகளில்
என் மனதும் அவ்வாறு கலைந்து
கிடக்கிறது மகிழ்ச்சியில்
மழைத் துளிகளில் படிந்து
மடிந்து போகிறது
என் நிழல் உடல்.

*25-04-2016*

# பால்ய கால நினைவுகள்

மணல் வீடு கட்டி மகிழ்ந்து
நிலவை தம் கைகளுக்குள்
சிறைப்படுத்திய தருணங்கள்

கல்லெறிந்து மாங்காய் பறித்து
திருட்டுக் குரும்பை
இறக்கிய நினைவுகள்
இலைகுழைகளால் கறிசமைத்து
ஒருவருக்கொருவர்
ஊட்டிவிட்டு
மண்சட்டிகளில் மண்ணை நிரப்பி
சோறு படைத்து
அப்பமும் சுட்டு விளையாடிய பொழுதுகள்

பொய் பொய்யாய் கடையில் சாமான்
வாங்கி உணவுப் பொட்டலங்களை
உனக்கு எனக்கு என்று
பரிமாறிய காலங்கள்

அம்மா அப்பா விளையாட்டில்
பிள்ளைகளை அதட்டி
மரத்தில் தொட்டில் கட்டி
பாவைகளை தாலாட்டிய பதிவுகள்

கேணிகளில் நீர் சுழிகளை உடைத்து
விளையாடிய அனுபவங்கள்

அந்தி நேரத்தில் ஒழித்து விளையாடி
கள்ளன் பொலிஸ்
உள்ளான் குரும்பை
ஆட்டங்களின் நினைவுகள்

நீர்ச்சுனைகளில் கல்லெறிந்து
வளையங்களை எண்ணிய அனுபவங்கள்
எல்லாமாய்
உறைந்து கிடக்கிறது
அடி மனதில்
முதிர்ந்த நினைவுகளுடன்...

09-05-2016

ஓசை முப்பத்திரெண்டு

## கனவின் இரகசியங்கள்

மனதின் கூச்சல்களால்
வெகுண்டெழும் கனாக்களின்
இரகசியங்களை ஆடையாக
அவிழ்க்கத் தொடங்குகிறான்
கனவின் சொந்தக்காரன்

அடர்ந்த இரவுகளின் நீந்தும்
தங்க மீன்களின் இரகசியங்களின்
தூறல்கள் மிதந்து கொண்டிருக்கின்றன
கற்பனைக் கடலில்

தீராத முத்தங்களில் புதைந்து கிடக்கும்
ஈரங்களில் தாழ்ந்து கிடக்கும்
இரகசியங்களின் வித்தைகளை
இரசித்தவாறு மயங்கிக் கொண்டிருக்கிறான்
கனவில் அவன்

உடலில் இருந்து உதிரும்
இரகசியங்கள்
எல்லவற்றையும் சுமந்து செல்லும்
பட்டாம் பூச்சிகள் அதனை
விற்பதற்கு தயார் செய்கின்றன...

மௌன மொழிகளில் விரிந்து கிடக்கும்
இரகசியங்களில்
தூண்டில் இட்டு மௌனக் கருத்துக்களை
கரையேற்றுகின்றான் தினம் தினம்...

காட்டில் காயும் நிலவாகவும்
கடலின் மழையாகவும்
பேசிக் கொண்டு திரியும் பனித்துளியாகவும்
பூக்களில் தகிக்கும் வெள்ளிப் பனியாகவும்
கனவின் இரகசியங்கள்
உதிர்ந்து கிடக்கின்றன
அவனுக்கான
மனதின் அடியில்...

*03-06-2016*

ஓசை முப்பத்திமூன்று

## மேது மண்

கல் பிளந்து கழனிகள் செய்து
வியர்வையால் நீர் ஊற்றி
மண் அறுத்து
வண்டல் பிளிந்து
வளம் பரப்பி
நீர் பாய்ச்சி
மண்ணுள் வேர் சொருகி
பயிர்கள் பல செய்த
எம் முன்னோர்களின்
உதிரம் உலர்ந்து கிடக்கிறது
இம்மண்ணிலே...

*09-06-2016*

## பரிணாமம்

பறவைகளின் பாடல் கண்டு
பலவித இசையை செய்து காட்டி
கடலலையின் ஓசை அறிந்து
விதவிதமாய் பாடல் கட்டி
பஞ்சு மிதவை கண்டு
பயனளிக்கும் தோணி செய்து
கல்லின் உரசல் கண்டு
நெருப்பை ஆட்சி செய்து
பறவைகளின் பறத்தல் கண்டு
இரும்புகளை பறக்க விட்டு
ஊரும் உயிர்கள் கண்டு
ஓடும் இரயிலும் செய்து
குருவிகளின் கூடு கண்டு
விதவிதமாய் உறைவிடம் அமைத்து
பசியாறும் மிருகம் கண்டு
வேட்டையாடும் திறமை பெற்று
போட்டி பொறாமை கொண்டு
எளியோரை வீழ்த்தும் வாழ்வு கண்டு
உயிரினங்களின் வரிசை கண்டு

பலவித மதங்கள் சமைத்து
மிருகங்களின் மோதல் கண்டு
மானுடத்தை கொல்லும் திறன் பெற்று
வாசம் தேடும் வண்டு பார்த்து
ஊத்தை நீக்கும் மணம் செய்து
தேனின் உருசி கண்டு
இயற்கையை உறிஞ்சிக் குடித்து
சந்திர கிரகங்களின் தோற்றம் கண்டு
விண்ணுலகப் பயணம் செய்து
ஆதாம் ஏவாள் நாணம் கண்டு
சந்ததி பெருக்கும் வித்தை கொண்டு
நல்லதை தவிர்த்து
நாசங்களை பாடம் கொண்டு
கொடுமை செய்து கொண்டிருக்கின்றனர்
இவ்வுலகை...

05-06-2016

# நியாயங்களைத் தேடி

பாதுகாப்பாளன் தன் வேலை
என்னவென்று தெரியாமல்
பிதுங்கித் திரிகையில்

காகங்கள் கரைந்தும் பறந்தும் தமது
உணவுகளைத் தேடி வீடு சேருகின்றன
சுதந்திர வெளியில்

தமக்கு நியாயம்
வேண்டும் என்று பல் பரிமாண
போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்
ஒவ்வொரு குழுவினரும்...

குழுக்களுக்குள்ளும் போராட்டம்
வெடித்து சிதறிக் கிடக்கிறது

தேசத்தின் கைகள் கட்டப்பட்டு
விரும்பிய குழுவினருக்கு
சேவகம் செய்கிறது அதிகாரம்
இதனால்
மலைகள் வெடித்தும் காடுகள் உருண்டும்
அசாத்திய இரைச்சல்களில்
அமைதி சேதமாக்கப்படுகிறது

தேசம் கடலலையை உருட்டி
அழகு பார்க்கிறது

குழுக்களுக்கெதிராக
இனவாதம்
அரசாட்சியின் தலை மீது
குந்திக் கொண்டிருக்கையில்
பாரபட்சம் பதட்டப்பட்டு
நாற்காலிகளை
கைப்பற்றிக் கொண்டிருக்கின்றது
அதிகார வர்க்கத்துடன்
நல்லுறவாயிருந்து
மலைகளை அன்பளிப்பாய்
பெறுகின்றனர்
குழுவின் தலைவர்கள்...
எதிர்ப்பு மலைபோல் வளர்ந்து
கொண்டே இருக்கிறது
சிறு குழுக்களுக்கெதிராக...
நியாயங்களுக்கும் எதிராக
நலிவுற்றவர்களின் தலைவர்கள்
பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்
பூதங்களின் மீது...

சுதந்திரமாக கரையும் காகங்கள்
நியாயங்கள் பற்றி எச்சரிக்கை செய்து
பரிகாசத்தை உதிர்த்து செல்கிறது.

*08-06-2016*

## மாமூல் வாழ்க்கை

மரங்களின் அடியில்
மிதக்கிறது
நிழல்
பூமிக்கு ஆறுதலாய்...

நதியின் மீதேறும்
சருகுகள்
உயிர் உள்ளதாய் பயணிக்கின்றன
நீரின் கைரேகைகளுடன்...

நுரையும் அலையும
அடங்காத நீரோட்டமும்
கடலின் பிடிவாதமாய்...

வானமும்
மேகமும்
இடி மின்னலும்
புரியாத புதிராய்...

வரிசை வரிசையாய்
எறும்புகளின் ஊர்வலம்
மனிதர்களுக்கான விநோதமாய்...

காற்றின் சிறகுகளில்
பயணிக்கும்
மழைத்துளிகள்
மானிடருக்கான கொடையாய்...

வண்டுகளின் கவர்ச்சிக்கான
பூக்களின் வாசங்கள்
மகரந்த சேர்க்கைக்காய்...

குழம்பாத
இயற்கையின் சமநிலை
பாதுகாப்பாய்
பரவிக்கிடக்கிறது
எல்லா உயிர்களுக்கும்...

*30-05-2016*

## பேருந்தின் குரைப்பு

நேற்றயை இரவின் நிமிடங்களை
அதிகம் குடித்து
அலுவலக நேரத்தின்
விட்டுக் கொடுப்புக்களை
செய்கின்றேன்
நிறுத்தத்தில் தங்கி இருக்க
சாலையில் பேருந்து
என்னை நோக்கி குரைத்து செல்கிறது
உடலில் பதிக்க பட்டிருக்கும்
வியர்வை குப்பியோடு
நுழைகின்றேன் அலுவலகம்...
அருகருகே முளைத்திருந்த கட்டிடங்கள்
கிளைகளை தொங்க விட்டு பரப்பி
வணிகத்தில் இயங்கி கொண்டிருக்கின்றன...
காமம் உடலில் குந்தி இருக்கையில்
அனேகர்களின் பார்வை கத்திகள்
பாலுணர்வை துளாவி
தகாப்புணர்ச்சியில் ஈடுபடுகின்றன
உணர்வுக் குவளைகளால்
வழிந்தோடும் ஸ்பரிசங்கள்
எனக்கான பங்கினை பூர்த்தி செய்ய
விரும்பமானவருடன்
படுக்கையை பகிர்நது கொள்கின்றன
சொந்த தேவைக்கு அலுவலக
நேரத்தை கரைப்பது
அபாயகரமானதுதான்...

சோலி முடிந்து
கட்டிடங்கள் மெலிந்து கிடக்க
சாலைகள் பொங்கி வழிகின்றன
சனத்திரளால்...
காம்புகளில் தன்னை நிமிர்த்தி
பூக்களை அணிந்திருக்கும்
நடை தூர தோட்டத்தில் நுளைய
மனதில் பூக்களின் வாசம் கசிகின்றது...

மீண்டும் மறு புறம் நோக்கிய
அதே பேருந்து புலம்பிச் செல்கின்றது
என்னை பார்த்து...

*03-09-2016*

# ஒரு துண்டுக் காடு

தூர எறிந்த
பச்சை நிறங்களிலாளான
காடு பரவிக்கிடக்கிறது
வரிகளால் மேய்ந்த மிருகங்களும்
நடமாடி திரிகின்றன
மெல்ல நகரும் நீர்த்தாவரங்களும்
நிறங்களை அணிந்த
மணங்களைப் பூசிய பூக்களும்
அடர்ந்து கிடக்கின்றன
வெளிச்சம் இல்லா
சூரிய ஒளி பரவிக்கிடக்கிறது
மரங்களின் இடுவலுக்குள்
தேவையிலும் மிச்சமான
மழைத்துளிகளும்
நழுவிச் செல்கிறது இலேசாக
அடர்ந்த வெளிகளின்
உள்ளே நுழைந்து
அனைத்தையும் உள்ளடக்கிய
ஒரு துண்டு காட்டை
மனசில் தாங்கி
அவளிடம் தருகிறேன் பரிசாக
உன் மடியில் கிடக்கிறேன் நான்
ஒரு துண்டு காடாய்...

16-05-2016

# இரவுப் பொழுது

முந்திச் செல்லும்
பகல் பொழுதை
இருள் ஆக்கிரமிக்கின்றது

மாலையில் சூரியன்
தன் படுக்கைக்குச் செல்கின்றான்
சருகுகள் பெரு வெளிகளை
அலங்கரிக்கின்றன

மலை முகடுகளை
பனித் தாள்
முக்காடு போட்டுக்கொள்கின்றன

குளிர் பாம்புகள்
ஊடுருவிச் செல்கின்றன
உடல்களை

மெல்லிய காற்றில்
வாசம் பரவி வந்து
இரவுப் பொழுதில் வீழ்ந்து கிடக்கிறது
தனிமையில்

ஆசைகள் அனைத்தும்
சுருட்டி வைக்கப்பட்டிருக்கின்றன
மனிதர்களின் மனங்களில்

இறுதியில் குந்தியிருக்கிறது
பொழுதொன்று
என் காலடியில்.

17-06-2016

# பாதி மனதுடன்

பரபரப்பு நிறைந்த காலைப் பொழுது
சூரிய வெளிச்சத்தில்
புதைந்து கொண்டிருக்க
ஒவ்வொருவரும் வேகமாக ஏறி இறங்கி
நகர்ந்து கொண்டிருக்கின்றனர்
சாலைப் பேரூந்துகளில்...
உலர்ந்த சிறகில்லா நுண்ணங்கிகள்
பெரு வெளியை
நிரப்பிக் கொண்டிருக்கின்றன
ஒற்றையர்கள் வெட்டிப் பேச்சுக்களில்
பங்கேற்கின்றனர் மற்றவர்களுடன்...

காற்றில் பறக்கும் முந்தானை ஒன்றில்
என் மனம் பறந்து கொண்டிருக்கையில்
கண்களால் அணைத்துக்கொண்டிருக்கிறாள்
என்னை அவள்
பல பேர் மத்தியில்...
பதிலுக்கு நானும் உதடுகளால்
அருந்திக் கொண்டிருக்கிறேன் அவளை
இன்னுமொருத்தி புருவங்களால் கிண்டல்
செய்து கொண்டிருக்கிறாள் அனைவரையும்...
மது அருந்தியிருக்கிறது
வயோதிபர் ஒருவரை
அக்கணத்தில்...
நதி போல் வளைந்து கிடக்கும் பாதையில்
பேரூந்து அசைந்து கொண்டிருக்கிறது...

சிலர் கனவில்
மிதந்து கொண்டிருக்கையில்
எண்ணங்களை
பருகிக்கொண்டிருக்கின்றனர்
பல பேர்...
அப்படியே அவளை
பாதி மனதுடன்
சேர்த்து இருத்திவிட்டு
பாதி மனதுடன்
பாதி வழியில்
இறங்கி விடுகிறேன்...

*29-06-2016*

## சொட்டு ஏழு

வீழ்ந்து கிடக்கும்
வண்ணத்துப் பூச்சி
தன் கண்ணாடி இறகுகளால்
உந்திக் கொண்டு
மேலெழுந்து பறக்கிறது
சுதந்திர
வாழ்வை நோக்கி...

## சொட்டு எட்டு

எல்லா
கவிதை வரிகளிலும்
அவளது நினைவுகள்
குட்டி போட்டுக் கிடக்கின்றன
காதலின்
வாரிசுகளாக...

## பெருவெளியில் நீந்திச் செல்லும் மனம்

கனவுகளை விழுங்கிய இரவிலிருந்து
நழுவிய என்னுடல்
காலை மைதானத்தில்
நீந்திச் செல்கிறது
உடல்களை கழற்றிய மனம்
கறுப்புச் சேலை உடுத்த பாதைகளின்
கதவுகளைத் திறந்து நதியாய்
நீண்டு ஓடுகிறது
பாதைகளில் வழிந்து கிடக்கும்
இருப்பிடங்களினை முத்தமிட்டு
வழிப்போக்கர்களைத் தடவி
வழுகிச் செல்கிறது அது
வாகனத் தரிப்பிடங்களில்
காதலை உதிரச் செய்து அன்பைப் பரப்பி
விரும்பிய உடல்களில் மேய்ந்து செல்கிறது
பூக்களின் தம்பங்களில் குந்தியிருக்கும்
பனிப்பழங்களில் சறுக்கி விளையாடி
காற்றில் மிதந்து கணங்களைக் கடந்து
நழுவிச் செல்கிறது அது
ஒற்றை வண்ணத்துப் பூச்சியுடன்
ஒன்றி பயணித்து வான வெளிகளுக்கு
நிறம் தீட்டுகிறது
இறுதியில் மாலை மயக்கத்தில்
அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறது
தன் உடலுடன்.

*22-06-2016*

ஓசை நாற்பத்திரெண்டு

# பொன்னாடை

இவருக்கு அவர் என்று
மாறிமாறிப் போர்த்தி
போர்வைக்குள் ஒளித்து
வைக்கப்படுகிறார்கள்
மனிதர்கள்
தினசரி மேடைகளிலும்
விழாக்களிலும்...
பொன்னாடை பற்றிய
புகைப்படங்கள் தான்
இன்றைய தினசரிகளில்
அதிகம் நிரம்பியிருக்கின்றன...
அனேகர் விரும்பும் போர்வை
இதுவே இன்று...
தோளிலிருந்து வழுகிய சால்வை
நீந்திச் செல்கிறது சாலை முழுவதும்
வெறுப்புப் பேச்சுக்களை உதிர்த்து...
பொன்னாடை ஒரு
கேலிக்கூத்து...
நானும் உள்ளடக்கம்.

*01-06-2016*

# உருவிய உயிர்

தீர்ந்து போன பொழுதுகளும்
தீராத நினைவுகளும்
தொலைந்து போன இரவுகளும்
வரண்டு போன காலங்களும்
மறந்து போன கனவுகளும்
கனவாகிப் போன எண்ணங்களும்
உதட்டுக்கு கிடைத்த முத்தங்களும்
உடலடைந்த இன்பங்களும்
உடலைச் சேராத துன்பங்களும்
வெளிவராத வார்த்தைகளும்
கருக்கொள்ளாத சிந்தனைகளும்
எல்லாமாய்
படிந்து கிடக்கின்றன
உருவி எடுத்த
உயிரில்...

*07-06-2016*

## முகப் புத்தகம்

வேகமாக செய்திகளை
பரவச் செய்யும்
கைவிடப்பட்ட
பொதுச் சுவர்
யார் வேண்டுமானாலும்
கீறிக்கொள்ளலாம்
தமது சித்திரங்களை
விரும்பிய நேரத்தில்...
முக மூடிகளின் புகலிடம்
கனவான்களின்
சுதந்திர வெளி...

*06-06-2016*

## சொட்டு ஒன்பது

காசு பணம்
எல்லாம் பெருகிக் கொண்டேயிருக்கிறது
மனிதர்களின் கைகளில்
ஆனால்
சுருங்கிக் கொண்டே வருகின்றது
ஈகை மனம்...

## சொட்டு பத்து

நுளம்புகளுக்கு குளிப்பாட்டி
வெள்ளையடிக்கும் காலம்
தொடங்குகிறது
மழைத்துளி தரையில்
தொடுவதனால்

# கனவுத் தொடரோட்டம்

உயிரில் நீந்தும்
ஞாபகக் குடுவையிலிருந்து
அசையும் எண்ணங்களையெல்லாம்
காற்றின் உதவியுடன்
வானில் தொங்கும் விழுதுகள் பற்றி
விசிறிக் கிடக்கும்
நட்சத்திரக் குவியல்களில்
தங்கியிருந்து
சித்திரங்களாக வடிக்கின்றேன்

வரைவுகள் ஒவ்வொன்றும்
உயிர் பெற்று
கரு மேகங்களாக அசைந்து
மழை முகில்களாக கர்ப்பமடைந்து
மழைக் குழந்தைகளாக
வானிலிருந்து வழுகி
ஏகாந்தக் கனவில்
வீழ்கிறது
துளித்துளியாய்...

கனவுத் தொடரோட்டம் கலைந்து
நினைவின் நீட்சியில்
வழி தப்பிச் செல்லும்
கவிஞனின் இதயம் அழுகிறது

மௌனத்தால் தன்னைப்
போர்த்திக் கொண்டு
அடர் குளிரில்
ஓடி மறைகிறது கனவு...

*15-06-2016*

# கவிதை படைக்கும் சிற்பி

கவிதை படைக்கும் சிற்பியாகி
அலைந்து திரிகின்றேன்
எல்லா உடல்களிலும் நான்

அளவிட முடியா உணர்வுகளில் தங்கியிருந்து
அவற்றை வாசித்து கவிதைகளை
படைக்கின்றேன்

படமாக்க முடியா கனவுகளில் இடம்பிடித்து
காட்சிகளை படமாக்கி
கவிதை வரைபவன் நான்

பெருவெளி காட்சிகளின் தோற்றப்பாடுகளை
சொற்களுக்குள் சிறைப்படுத்தி
கவிதைகளால் புனைகிறேன் தினமும்

பெயரில்லா மன நிலைகளின்
தன்னிலை
முன்னிலை
படர்க்கை
என்பனவற்றினை பரிமாற்றம் செய்து
வார்த்தைகளில் வடிக்கின்றேன்
ஒவ்வொரு பொழுதிலும்...

மாந்தர்களின் உரையாடல்களையும்
மொழிமாற்றி கவியாக்கம்
செய்தல் எனது தொழில்

முகக்குறிகளை சொல்லில் பிரித்து
வகுதியாக்கி பாடல்களாக
வரைகிறேன் நான்

காற்றிடைவெளிகளில் விரவிக் கிடக்கும்
அரூப உருவங்களையும்
கவிதையாக்குகின்றேன் தினமும்

இரவுகளை மொழி மாற்றி அவற்றையும்
கவிதையாக்குகின்றேன்
காலைப் பொழுதுகளில்...

*28-06-2016*

## பல மனம் ஒருடல்

பல மனங்களுடன்
உறங்கிக் கிடக்கிறது
இந்த ஒற்றை உடல்...
ஒவ்வொரு மனதுக்கும்
ஒவ்வொரு புன்னகை
பல கதைகள் நடந்து
செல்கின்றன ஒவ்வொன்றிலும்
குழந்தையாக
சிறுமியாக
குமரியாக
கிழவியாக
பாசாங்கு செய்கிறது மனது
ஊற்றிக்கொடுக்கும்
காற்றைக் குடித்து
வீறாப்பு கொண்டு
உடல் அசைந்து
எங்கேயோ அலைந்து திரிகிறது
பல வேசம் போட்டு.

*06-07-2016*

## தொட்டு பதினொன்று

மறுபடியும் மறுபடியும்
உன் கன்னங்களில்
புன்னகையாகப் பிறக்க வேண்டும்
மீண்டும் மீண்டும்
உன் புன்னகைக் குளத்தில்
மீனாக நீந்த வேண்டும்
வாழ்நாள் முழுவதும்...

## தொட்டு பன்னிரெண்டு

என்னை நானே
சிறைப்பிடிக்க வேண்டியதாயிற்று
புகைப்படச்சுருள் ஒன்றில்
இன்னுமொரு பொழுதில்
நானாகவே அழகு பார்க்க
வேண்டியதாயிற்று என்னை
நிலைக்கண்ணாடியில்
அதற்கும்
ஆளொன்று கிடைக்காததால்...

## கல்லறை

மூச்சுக்காற்று இயற்கையுடன்
பரிமாறிக் கொண்டு
நகரத் தொடங்குகிறது
பின்னால் நானும் தொடர்கிறேன்
உடலில் பசுமையான எண்ணங்கள்
கவிகின்ற இரவொன்றில்
மெல்லத் தாவும்
மின்மினிப் பூச்சிகளின் வெளிச்சம்
பாதை காட்டுகிறது
முன்னிரவுப் பறவைகளும் ஒத்திசைவில்
நேர் கோட்டில் பயணிக்கின்றன
என்னுடன்...
இருள் வண்டுகளின் இரைச்சலும்
என்னைக் கடந்து செல்கிறது
இடை வெளிகளில்...
மரங்கள் நெட்டையாக
நிறுத்தப்பட்டிருக்கின்ற
இருளின் மத்தியில்
விழிகளைப் புதைத்து நிற்கிறேன்...
கனிந்த நெஞ்சம் விழுந்து கிடக்கும்
கல்லறையில்
முன்பொரு காலத்து நினைவுகளுடன்
உறங்கிக் கிடக்கும் எண்ணங்களை
மீட்டவனாய்.

08-07-2016

## வற்றாத கருவறை

கருவறையின் பனி மூட்டம்
இமை மூடும் இருட்டில் நிறைந்திருக்கிறது
கரு உருவாகி
சித்திரக் கூடத்தில் பல கலை கற்று
தாய்மையின் கனவை நிறைவேற்றியதாய்
உயிராகி உலகின் விளிம்பை அடைகிறது
உரிய பொழுதில்...
ஆசையில் மூழ்கி
உணர்வுகளின் மேயலுக்கான பரிசாய்
கண் வெளி இருட்டில் உலகம் நிறைந்து
விரிந்து கிடக்க
நிறம் உதிர்ந்து
பெரு வெளியில் புதைந்து போகிறது...
ஈடில்லா ஒலி எழுப்பி
பெரு மூச்சில் மகிழ்ந்து போகின்றனர்
சுற்றத்தார்...
நீளும் தனிமையில்
வற்றாத கருவறை...

*30-06-2015*

## சொட்டு பதின்மூன்று

துயரங்களை தூக்கிக்
கொண்டு திரியும்
அடித்தட்டு மக்களின்
வாழ்க்கையில் மகிழ்ச்சியும்
வரத்தான் செய்கிறது
திரு நாட்களில்...

## சொட்டு பதினாலு

விசிலடித்து
வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது
நாற்சக்கர வண்டி ஒன்று
உயிர் கசிந்து கொண்டிருக்கிறது
துளித் துளியாய்...

# வலிகளின் சுவை

போர்த்தி வைக்கப்பட்டிருக்கும் வலிகள்
மனங்களில் பரந்து கிடந்து
எப்போதும் போல் மனதை
உடைத்து விடுகிறது...
அவளின் புன்னகை ஒவ்வொன்றிலும்
அனேக கதைகள் புதைந்து கிடக்கையில்
நாளுக்கு நாள் தோன்றும்
அவளின் வலியின்
துளிகளைப் பொறுக்கி
நீர்க்கச் செய்கிறேன்
வலிகள் உதிர்ந்து போகும் வரை...
ஆயினும் உதிரும் முத்தங்கள்
ஒவ்வொன்றிலும்
நானாகவே அவள் இருப்பதால்
ஒவ்வொரு இரவும் நீளமானதாகவே
உறங்கிக் கிடக்கிறது...
சிறிது சிறிதாக
அனைத்தும் வீணாய்ப் போகின்றன
வலியின் நிர்ப்பந்தங்களால்...

வலிகளால் நிறையும் வானம்.

*11-07-2016*

ஓசை ஐம்பத்தொன்று

## வெறும் பயம்

காற்றில் வீசிய கூர்வாள்
மிதந்து வருகிறது
என்னை நோக்கி இரக்கமில்லாமல்...
பறந்து கொண்டிருக்கும் நிழல்கள்
அதனை
தடுத்து நிறுத்த முயற்சிக்கையில்
மனதின் விளிம்பில்
பயம்
உட்கார்ந்து கொள்கிறது இப்போது
வருடிவிட்ட தென்றலில்
பயம் ஒட்டிக்கொள்கின்றன...
மழைக்குதிரைகள் என் தலை
நோக்கி விரைந்து கொண்டிருக்கையில்
வெயில் வற்றி இருள் கவ்விக்
கொள்கிறது
நான் தப்பித்துக் கொள்கிறேன்
பயத்திலிருந்து...

பயங்களால் நிறையும் மனம்.

04-07-2016

ஓசை ஐம்பத்திரெண்டு

# முன்னோர்களின் தொன்மம்

காலம் படிவச் சுருள்களாக மடித்து
வைக்கப்பட்டிருக்கிறது இப்பூமியில்
சமூக அடுக்குகளின் தோற்றம் மறைந்து
பின்னிக்கிடக்கிறது சமுதாயத்தில்
மானுடனின் பரிணாம வளர்ச்சி ஊர்ந்து
வருகிறது தற்கால மக்களை நோக்கி
முன்னோர் வாழ்வு நிழல்களாகப்
படர்கின்றன இன்றைய பொழுதுகளில்
வாழ்வு முடிவற்ற வார்த்தைகளால்
விரிந்து கிடக்கிறது இவ்வுலகில்
நம் முன்னோர்களின் குருதிகளில் தொன்மம்
மறைந்து கிடக்கிறது படிப்பினையாக
ஏடுகளிலுள்ள புராணம் கால் முளைத்து
உருண்டு வருகின்றது இன்றுவரை
வாழ்வை அழித்து அழித்து எழுதுகிறது
தொன்மம்.

*16-07-2016*

ஓசை ஐம்பத்திமூன்று

## | சிறையில்

உறங்காத விழிகளில் பொழுதுகள்
நீந்தி
வலிகள் கனத்த மனதோடு
கருவிழி இருட்டில்
உறங்கிக் கிடக்கின்றன
மெல்ல அசையும் இருட்டின்
நெடுங்கோட்டில் பயணிக்கின்றன அவை
குருவிகளின் இரைச்சலற்ற
இருளின் ஆட்சியில்
நீண்ட காலமாக
நாங்கள் அப்பிக்கிடக்கிறோம்
பாதணிகளின் இரைச்சல்
நிரம்பியிருக்கிறது சுற்றிவர...
உயிர்ப் பண்டங்களாய்
வாடிக் கிடக்கின்றோம் முழுக் காலமும்
நாலுக்கு ஆறு அறைகளில்
சுதந்திர வேட்கை நிறைந்து...
ஆசைகளைத் தின்று வாழ்வைப் புதைத்து
விடுதலையின் ஒளி வட்டம்
உதிர்ந்து கிடக்கிறது...

*19-07-2016*

## சாலைப் பயணம்

அன்பு கண்களால் வழிந்தோட
ஒருவரை ஒருவர் ஆரத் தழுவி
மௌனத்தின் கைகளில்
இருவரும் மிதக்கின்றனர்
உணர்வுகளை உரசும்
நீர் நதி பெருகுகிறது
உதடுகளுக்கிடையில்...
சேமித்த அன்பு
பரிமாறப்படுகின்ற பார்வைகளில்
பல காதல் திரைப்படங்கள்
ஓடி முடிகிறது
சில நிமிடங்களில்...
சனத்திரளின் சந்தடியால்
ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து
எழுந்து விடுகிறேன்
சாலை பயணத்தில்...
தொங்கிக்கொண்டிருக்கிறது
பாதித் தூக்கம்
என் கண்களில்...

01-07-2016

## கற்பனை

மேலும்
திரைப்படம் ஒன்று
ஓடி முடிந்திருக்கிறது தெருவொன்றில்
வெள்ளைப்பொழுதுகளை
அருந்தியிருக்கிறது
காளை மாடு ஒன்று
வீதி விளக்கின் வெளிச்சத்தில்
குருவிகள் குளிர் காய்ந்திருக்கின்றன
மாலை நேர
குளிர் காற்றில் நீச்சலடிக்கின்றனர்
சிறுவர்கள்
வானம் ஓடிக் கொண்டிருக்கிறது
குறுக்கு நெடுக்காக
காற்றை உறிஞ்சி
குடித்துக் கொண்டிருக்கின்றனர்
மனிதர்கள்
ஒருவர் கேட்கிறார்
இது கவிதையா என்று...

எண்ணங்களில்
பெருகி வழிகிறது கவிதை.

*21-07-2016*

## கப்பலும் கவிதையும்

காற்றில் ஆடும் வெளிச்சம்
கண்ணில் படாமல் இருப்பது போல்
எனது கவிதைகளும் நகர்கிறது
யாருக்கும் தெரியாமல்
கடல் பாய் விரிந்து கிடக்கிறது
பரந்த வெளிகளில்
காதலின் நெருக்கடியில் பயணிக்கும்
இருவரும் தழுவிக்கொள்ளும்
காட்சி வருகிறது கவிதையில்
அதே கப்பலில்
நானும் பயணிக்கின்றேன்
தடுப்பை நீரிடம் ஒப்படைத்து
இன்னுமொரு கடலுக்குள்
விரைந்து செல்கிறது கப்பல்
பின்னர் அவர்களின் மகிழ்ச்சி
மங்கிச் செல்கிறது படிப்படியாக
கடலின் பக்கம்
பார்வையைச் செலுத்துகின்றனர்
இருவரும்

இன்னும்
எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன்
கவிதையினை அவர்களின் கண்ணீரால்
துன்புறுத்தும் துயர் அவர்களை
இனி பின் தொடராது என நினைத்து
இருவரும் எல்லையில்லா மகிழ்ச்சியுடன்
கடலில் நுழைகின்றனர்
அவர்களைக் கடந்து
செல்கிறது கப்பல் இப்போது
கப்பலினுள்ளேயே கவிதையை
முடித்து விடுகிறேன் நான்
மடிந்து போகிறது அவர்களின் காதல்.

***14-07-2016***

## யாசகன்

மர நிழலில்
ஒவ்வொரு பொழுதிலும்
மரத்தைச் சுற்றி அந்த மனிதர்
உறங்கியும் விழித்தும்
நாட்களை கடந்து செல்கிறார்
அனேக கண்கள் கடந்து செல்கின்றன
சில்லறைகளை வீசியும்
புன்னகைகளை உதிர்த்தும்...
இடம்பெயர்ந்து செல்லும்
ஒவ்வொரு வாகனங்களிலும்
அவனது கனவுகள் சவாரி செய்கின்றன...
கந்தலான ஒரு பாய் துண்டு சேலை
ஒரு துண்டு குடை
இவரின் பண்டங்களாய்...
நாட்களை எண்ணி
மூச்சுக்களை விற்பனை செய்து
காலம் கரைந்து போகிறது
நெடுநாள் பயணத்தின்
நடு வழியில்...
பெரிதாய் ஒன்றுமில்லை
உரிமையாக்கி கொள்ள வேண்டும்
ஒரு சோடி புதிய காலணியை...

மர நிழலின் ஒரு துயரம்.

11-07-2016

# முரண்களின் மைதானம்

கைப்பிடியளவு மனதில்
சில துளி நினைவுகள்
தொண்டைக்குள் நிறைந்திருக்கின்றன
இரவு முழுவதும்
விழித்து விழித்து தூக்கமாய்
பாசாங்கு செய்கிறது என் மனம்

நேற்றைய முரண்பாடுகளையெல்லாம்
பெயர் தெரியா பட்சி ஒன்றில்
புதைத்து விட்டு
முன்னைய நினைவுகளைத் தாங்கி
காத்திருக்கின்றது சந்திப்புக்காக
இன்றைய பொழுதில்

திராட்சை இரசமாக திரண்டிருக்கும்
என்னுடலை காற்று வாள்
அரிகிறது மெதுமையாக

பூக்களில் மிதந்து வரும் வாசனைகள்
தின்று கொழுத்திருந்தன
இருவருக்கான நட்புப்
பெரு வெளிகளில்

சோகங்கள் நிறைந்த காலைப் பொழுது
பரவிக்கிடக்கிறது இருவரின் மேனிகளில்

விதைத்த முரண்பாடுகளின்
முரட்டுத் தழுவலின் முகத்தை
முரணின் சேலையாக
அணிந்து திரும்புகிறாள்
நட்பின் வாசலுக்கு...

உறவின்
விளைச்சலை அறுவடை செய்ய
காத்திருக்கின்றேன் நேருக்கு நேராய்...

முரண்பாடுகள் மைதானமாகி
விரிந்து கிடக்கிறது
இருவரின் முகங்களிலும்

ஆயினும் கண்களால்
முத்தமிட்டேன் அவளை...
பல தடவைகள்...

27-08-2016

# சிறுவயதுப் பாடசாலை

நீண்ட நாளைக்கு பிறகு
திரும்புகின்றேன்
சிறு வயது பாடசாலைக்கு
பால்ய கால நினைவுகளை
உச்சாடனம் செய்து கொண்டு
பால்ய கால நண்பர்கள் சிலரும்
சேர்ந்து கொள்கின்றனர்
சொல்லி வைத்தால் போல...
கால வேறு பாடுகள் கலந்து
இன்னும் அந்த பனை மரம்
அதன் குருத்துகள் புன்னகையுடன்
எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றன
எனது வரவின் மகிழ்ச்சியாய்...
அதே கிணறு...
உடைத்து அடுக்கப்பட்டிருக்கும்
கதிரை மேசைகள்...
ஊஞ்சலாட்டிய அதே ஆல மரம்
வயது முதிர்ந்த ஏனைய மரங்கள்
என்னுடன் பேசுகிறது இப்போதும்
கடந்து போன நாட்களை எண்ணி...
பல கரிச்சித்திரங்கள் நடனமாடும்
பழைய கட்டிடத்தின் சுவர்கள்
பாடசாலையின் கூரையில்
இன்னும் பல துளைகள்
சூரியன் வந்து இறங்குவதற்காய்...

புதிதாய் பல கட்டிடங்கள்
முளைத்திருக்கின்றன
வினோதங்கள் தாங்கி...
ஆசிரியர்களும்
வேறு வேறு முகங்களை
அணிந்திருக்கின்றனர்
அருகில் இருந்த கம வெளி
மாப்பிள்ளை மாடுகளையும் காணவில்லை
வேறு ஏதேதோ முளைத்திருக்கின்றன
கற்காளாலும்
இரும்புகளாலும் அந்த வெளியில்...
அங்கிருந்த குறோட்டன்
தோட்டத்திற்கு பதிலாய்
புதிதாக பல மலர் தோட்டங்கள்
பல வாசனைகளைச் சுமந்து...

அவளை மட்டும் அங்கு காணவில்லை
அந்த கரும் பேரழகி
எங்கு இருக்கின்றாளோ
எத்தனை பிள்ளைகளோ...

03-09-2016

# இருள் கவ்விய மழை

பெரு வெளிகளில் நிரம்பியிருந்த
வெளிச்சங்களை கறுப்புத் துணி
போர்த்திய இருள் துண்டுகள்
கௌவிக் கொண்டிருந்தன
மாலைப் பொழுதுகளை

மழைக்குழந்தைகள் வானில்
இருந்து இறங்கி
குழந்தைகளுடன்
விளையாடி
குதூகலிக்க
வாசல் முழுவதும்
மகிழ்ச்சி நிரம்பியிருக்கிறது

மின்னலும் வானத்திலிருந்து இறங்கி
பெரு வெளிகளில் உலர்ந்து கொண்டிருக்க
செயற்கை வெளிச்சங்கள்
மின் கம்பங்களில்
துண்டு துண்டாக கொழுவப்பட்டு
வெளிச்சம் பரவிக்கிடக்கிறது...

பெரும் பூதம் ஒன்று
செயற்கை வெளிச்சங்களையெல்லாம்
விழுங்கிக் கொள்ள
விளையாடிக் கொண்டிருந்த
குழந்தைகள் ஆதங்கத்தில்
இருக்கையில்
மழைக்குழந்தைகளும் துக்கத்தில்
ஆழ்ந்திருக்கின்றன

மின்னலில் ஒரு துண்டை
கடனாகப் பெற்று மின்கம்பங்களில்
கொழுவி விடுகிறேன்
வாசலெல்லாம் மிதக்கின்றன
வெளிச்சத் துண்டுகள்
வெள்ளிச் சிதறல்களும்
வாசலில் வழிந்தோடுகின்றன
குழந்தைகளின் முகங்களில்
வெளிச்சப் பூக்களும்
மகிழ்ச்சியும்
பூத்துக் கிடக்கின்றன.

*21-09-2016*

# கனவும் மனம்

ஊர்ந்து செல்லும் இரவொன்றில்
கனவுப் பந்துகள் உருளுகின்றன
கனவுகளை ஆட்சி செய்யும் மனங்களில்...

அழகு ஒழுகும் இளம் கனவுகளால்
மனம் சொட்டுச் சொட்டாய்
உதிர்ந்து கிடக்கிறது இரவின் அடியில்

தூய எண்ணங்களை சிறைப்பிடிக்கும்
கனவுகள் விலகிச் செல்லும்
இரவுகளை ஆக்கிரமிக்கின்றன

சிந்தனைத் தெருக்களில் கனவுகளை
உருட்டி கருத்துக்களை
வழியச் செய்கின்றன மனங்கள்

கனவு மைதானத்தில்
ஆட்டம் ஒன்றை நிகழ்த்தி
வெற்றியைக் கொடுக்கின்றன
பின்னிரவுகளில்...

நெடிய கனவுகளைச் செய்து
இரவுகளை நீட்டி
விடிய விடிய விழித்திருக்கிறது அது

சுழல் காற்றில் சிக்கிய
துகள்கள்போல் இன்னும்
சுற்றிக்கொண்டிருக்கிறது மனதை
விடு பட முடியாமல்

இரவின் ஓரங்களிலும்
சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம்
எட்டிப் பார்த்து
நிகழ்ந்த படி இருக்கிறது
கைப் பிடியளவு கனவுகள்...

மனம் குமைந்து கொண்டு
சலிப்பை சொல்ல முடியாமல்
தவிக்கிறது
கனவின் அர்த்தங்களால்...

கனவின் அந்தரங்கம் தெரிந்தவரை
தேடிக் கொண்டிருக்கிறேன்...
பெயர் தெரியா தொடர் கனவுகளை
நிறுத்துவதற்கு...
முகமூடியுடன் நகர்கின்றன
எனதான இரவுகள்...

*02-10-2016*

ஓசை அறுபத்திரெண்டு

# விளைப் பயன்

பல அதிசயங்கள் தோன்றி மறைகிறது

மழை ஓவியங்களை வரைந்து
மேகங்கள் பூச்சியாய் பறக்கிறது
வானவில் தனது நிறங்களை
உதிர்த்து கடலை மூடுகிறது
நதி தனது வாழ்வை முடிப்பதற்கு
வேகமாக மூச்சை உள்ளேயிழுக்கிறது

மரங்களின் நிழல்கள்
வேறு வேறு உருவங்களில் அசைய
மனிதன் தன் பிரதியை
அழித்து அழித்து உருவாக்குகிறான்...
காற்று தன் சிறகுகளை விரித்து
பறக்கத் தொடங்குகிறது
இறந்த காலங்களின் அசைவை
பருகிக் கொண்டு
நிகழ் காலம் நகர்கிறது
ஒவ்வொரு மனமும்
அன்பு வார்த்தைகளை உதிர்த்து
பசிக்கு உணவாக கொள்கின்றன

அசலின் நிழல்கள்
புதிய புதிய தோற்றத்தை
நிகழ்த்துகின்றன

பிரபஞ்சத்தின் முடிவென
பலரும் நினைக்கிறார்கள்

தங்களது வினை பற்றி
கேட்கப்படுகிறார்கள்
ஒவ்வொருவரும்...

வினைப்பயனின் விளைவுகளில்
மண்ணுலக வாழ்வு காண்பிக்கப்படுகிறது...
கேள்வி கணக்கிற்காக
அழைக்கப்படுகின்றேன் நான்...
ஆழத்தில் சலசலக்கிறது
மறு உலகம்...

*10-10-2016*

# உயிரின் கடைசித் துளி

துளித்துளியாய் உயிர்
வழிந்து கொண்டிருக்கிறது
சில மாத காலமாய்
மெழுகு திரியின் ஒற்றைச்சுடர்
காற்றின் திசைக்கேற்ப
அசைந்து
நிமிடங்கள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன...

வாரிச் சுருட்டி
மூலையில் வைத்திருக்கும்
உயிர்த் துளி ஒன்று
படிப்படியாக வழுகிச் செல்கிறது

மரணத்தின் உருசியை
சுவைக்கத் தொடங்கு முன்...
நொடிப் பொழுதில்
அசை போடப்படுகின்றன
எண்ணக் குவளைக்குள் இருந்த
அத்தனை எண்ணங்களும்...

உயிர் தன் இறக்கைகளை
விரிக்கத் தொடங்கி
பெரு நிலப்பரப்பை
இருள் கவ்வியது போல்
ஒவ்வொரு அங்கமாக
விழுங்கி வருகிறது
உடலின் அசைவற்ற நிலை...
கடைசித் துளியையும்
கழட்டி விடுகிறது உடல்...

சேமித்திருந்த கைப்பிடியளவு உயிர்
சிறகு முளைத்து பறக்க...
எண்ணங்களையும்
செயல்களையும் உற்பத்தி
செய்யும் இயந்திரம்
சரிந்து கிடக்கிறது
அசைவற்று...

சில மணிகளில்
கன்னம் குழி விழுந்து
வயிறு உப்பி
கால்களும் கைகளும் நீண்டு
தண்ணீரால் அழகு
செய்கின்றனர்

எண்ணம்
எழுத்து
மெய்யறிவு
படிப்பறிவு
பட்டறிவு
எல்லாமே உறங்கிக் கிடக்கிறது
உடலுடன்
பதிப்பித்தவை தவிர...

# பாதையின் முத்தங்கள்

இரு மருங்கிலும்
மௌன ஆடை அணிந்த
குளங்களுக்கு நடுவில்
பனி படர்ந்த பாதையும் தனது
ஆதங்கத்தை அணிந்து கிடக்கிறது...
வெள்ளை பூசிய பனிப்பாளங்களும்
மெல்ல மெல்ல தங்களது
தலைகளை உள்ளே இழுக்கின்றன
துண்டு துண்டாக
சன நடமாட்டம் இருக்கையில்
கதிரவன் தனது சிறகுகளை விரித்து
பறக்கத் தொடங்குகிறான்

குளங்களின் மீது சவாரி செய்யும்
நீர்ப் பறவைகளும் நடனமாடுகின்றன
மீன்களுடன் சேர்ந்து

மீன்களுக்கு தீனி போடும் சாக்கில்
ஓய்வுக்கு வரும் பெரிசுகளும் தங்களது
அழகினையும் சரி செய்கின்றனர் குளத்து நீரில்...
வெள்ளியால் நெய்யப்பட்ட சிதறல்களும்
குளத்தினை அலங்கரிக்கின்றன
சூரிய கதிரின் பிறப்பில்...

பொழுது தனது கால்களால்
மெல்ல மெல்ல
அடியெடுத்து நகர்கின்றது...

காதலர்கள் தங்களது உடல்களை
நீரின் மீது படியச் செய்து
சரி செய்து கொள்கின்றனர்
வண்ணத்துப் பூச்சிகளும் தங்களது
இறகுகளை அசைத்து
அன்பின் நிறங்களை
உதிர்த்துச் செல்கின்றன
காதலர்களுக்காக...

காதலர்களின் அழகில் மயங்கி...
புதிய புதிய பறவைகளும்
பெயர் தெரியா பூச்சிகளும்
புதிதாய் வந்தமர்கின்றன தங்களது
பாதை மறந்தவர்களாய்...

ஒரு துண்டு அன்பில்
நனையும் பெண்மை
கைப்பிடி அளவு முத்தங்களை பரிமாறி
தனது அழகையெல்லாம்
வாரிக் கொட்டுகிறாள்
கை பிடிப்பான் என்ற நம்பிக்கையில்...

சில மணிகளில்...
குலைந்து போன அழகையெல்லாம்
மீண்டும் சொருகிக் கொண்டு
நகர்கின்றனர் சோடி சோடியாக..
நகர முடியாத நாற்காலிகள்
தன் மீது படியும் அழகையெல்லாம்
அணைத்துக் கொண்டு
அங்கேயே கிடக்கிறது
பிரமாண்டமான
அழகின் செருக்கில்...

*30-10-2016*

# இரவல் மனிதர்கள்

மற்றவர்களின்
சிந்தனையில் வாழும்
இரவல் மனிதர் நாங்கள்
அபரிமிதமாய் கிடக்கிறது
சிந்தனைத் திறன்
எல்லோரிடமும்

வாழும் சுதந்திரம்
அருகிச் செல்ல
பாசாங்கு செய்ய
பழக்கப்பட்டிருக்கிறது
மனம்...

எல்லோருக்கும் பொதுவாய்
எல்லோருக்குமாக
சிந்திக்கிறான் ஒருவன்
எல்லோரின் மூளைகளையும்
இறக்கி
ஒப்படைத்திருக்கிறோம்
அவன்தான் எங்கள் தலைவன்

வீழ்ந்து கிடக்கிறோம்
தனியாளின் காலடியில்
அவரின் சிந்தனைக் குவளையில்
உமிழ் நீரின் கடலில்
கரைந்து போகின்றோம்
எப்போதுமே...

ஒருவனின் தயவில்
பல்லாயிரம் குடும்பங்கள்
ஒற்றைக் கட்டளையில்
அனேகரின் பேச்சுக்கள்
ஒழுகிக் கரைகிறது
நம்புகின்றன அனேக நெஞ்சங்கள்...

உண்மைப் பேச்சு தன்னையே
மறந்து நிற்கிறது
பல நேரங்களில்...

எங்களின் அனேகம் பேரின்
வாழ்வை
பிடிங்கி வைத்திருக்கிறானோ
ஒட்டு மொத்தமாய்
பிடித்து வைத்திருக்கிறானோ...
இன்னும் சில காலங்களில்
கல்லைத் தின்று
மண்ணைக் குடிப்போம்
நிலமை தொடருகையில்...

இன்னிலையில்
எவ்வளவு பருமனானாலும்
உன்னைத் தாங்கும்
என்று நினைக்கிறாயா
உனது கால்கள்?

அதிகார வளையம்
ஒவ்வொருவரின் வாய்களுக்குள்ளும்
கொழுக்கியாய் பதிந்து
வாயசைத்தலில்
தலைவனின் எண்ணங்கள்
உன் வாயால் வெளி வருகிறது...

ஒழுகிக் கரைகிறது
வேதம் சுமந்த இதயங்கள்

வேதமும் பண்பாடும்
மதிப்பிழந்து கிடக்கிறது
எல்லோரினதும் காலடியில்...

பல பேர் சேர்ந்து
ஒருவரின் கனவில்
வாழ்கிறோம்...

ஏமாறுவாரோ
ஏமாற்றிடுமோ
நின்று கொல்லும் அரசு.

*30-11-2016*

## சொட்டு பதினைந்து

வட்டமடித்து
பதியம் வைத்த
புதிய புதிய எண்ணங்கள்
வரிசை கட்டி நிற்கின்றன
மனதின் பாத்திகளில்...

## சொட்டு பதினாறு

வயலில் பூத்துக் கிடக்கும்
கவிதைகளெல்லாம்
வாடிக் கிடக்கிறது
அவள் வந்து புன்னகை
நீரை ஊற்றும் வரை...

## சேதாரங்களுடன் பிரபஞ்சம்...

பல கோடி ஆண்டுகளை கடந்து
புத்தாண்டை மீட்டத்
தொடங்குகிறது
இந்த பிரபஞ்ச வீணை
சூழலியல் சேதாரங்களுடன்...

வேகமாய் சுழலும் ஒரு துண்டு
நேரத்தையாகிலும் சேமமான வழியில்
மனதில் நிரம்பி வழியும் கனவுகளின்
வெற்றிச் சேலையை உடுக்கச் செய்து
வாழ்வின் பள்ளங்களை நிரம்பச் செய்யின்...

நீர்மையிழந்த செயலிகளை
துருப்பிடித்த மனங்களிலிருந்து அகற்றி
துயரங்களையெல்லாம் பரவசமாக்கி
தேன் வடியும் ஆன்மாக்களுக்கு
பரிசாக்குவோமாயின்...

வலிகளை புதைக்கும் தாய்மைக்கும்
புன்னகை பூக்கச் செய்யும் நட்புகளுக்கும்
வாழ்வின் அற்புதங்களை
எதிர்பார்க்கும் நமது எச்சங்களுக்கும்
நன்மைகளின் பரிவாரங்களை
கூட்டிச் செல்வோம் வீடுவரை...

தாய் நாட்டின் நன்மைக்காக...

*31-12-2016*

**கடைசிப் பக்கச் செய்தி...**

*கலை வடிவங்கள் யாருக்கும் சொந்தமல்ல*
*பரீட்சாத்த முயற்சிக்கும் அங்கு இடமில்லை*
*முழுமையைக் கொண்டு வருபவர்கள்*
*பேசப்படுவர் பலகாலம் வரை...*



அண்மையில் தான் கவிதைத் துறைக்குள்
காலடி வைத்தார் என்றாலும்,
நௌபல் அவர்கள் சாமானியப்பட்ட
ஒருத்தரல்ல. கடல் கடந்து விருதுகள்
வென்றது இவர் பேனா.
அறுபது மாதங்களில் நான்கு
தொகுதிகளின் சொந்தக்காரன்.
தமிழ் நாட்டில் "வைரமுத்து அறக்கட்டளை"
விருதுபெற்ற இருவரில் ஒருவர்.
"மிதக்கும் கனவுகள்"
கவிதைத் தொகுப்பிற்காக
தமிழகத்தில் பரிசும் விருதும் பெற்றவர்.

உள்ளூர் கவிஞரெல்லாம்
வியந்து நிற்க,
உண்மையிலேயே
கவிதை உலகில் வலம்வரும்
ஒரு அசாதாரண கவிஞன்.
சூதும் வாதும் தெரியாத மொழியில்
தான் சொல்ல வந்ததை கச்சிதமாக
சொல்லும் வல்லமை
நௌபலுக்கு வாய்த்திருக்கிறது.

எஸ்.எல்.எம். ஹனீபா

நௌபல் அவர்களிடமிருந்து
நான்காவதாக வெளிவரும் இந்தக்
கவிதைத் தொகுப்பு நினைவேக்கம்
(பால்யகால நினைவுகள்)
உலக அரசியல் (நியாயங்களைத் தேடி,
போர்க்காடு) குடும்ப பாசம்
(அவள் வளர்ந்து விட்டாள்) சமூக
விமர்சனம் (மெல்லச் சாகும் உயிர்கள்,
முறைப்பாடு, எமது மண், பரிணாமம்,
பொன்னாடை, முகப்புத்தகம், யாசகன்)
என்ற சில அம்சங்களை தொட்டுச்
சென்றாலும் அவருடைய கவிதை
வெளியில் காலில் பிணைந்த
சங்கிலியாகப் பின்தொடர்வது காதலின்
தகிப்பு என்று சொன்னால்
அது தவறில்லை.

இந்தத் தகிப்பு அஜந்தா சித்திரங்களில்
ஒருத்தியைப் பொருத்திப் பார்க்க
வைக்கிறது. ஒருத்தியின் புருவங்களில்
மழையைக் காண்கின்றது. பெண்கள்
தேவ கன்னிகளாகத் தெரிகின்றனர்.
ஒருத்தியின் நிழல் கூட சிரிப்பது போல்
தோன்றுகிறது. தன் ஆயுள் ரேகையை
ஒருத்தியின் காலடியில் காண்கின்றது.
மெட்டிகள் ஒலிப்பது சிணுங்குவது போல்
கேட்கின்றது. ஒருத்தியின் சிரிப்பை
சிந்திச் சிதறிய சில்லறைகளாகக்
காண்கிறது. ஒருத்தியின் புன்னகை
நீரில்லாமல் கவிதைகளெல்லாம்
வாடிக் கிடக்கின்றது. மனதின்
படிக்கட்டுகளில் ஒருத்தியின் உயிர்
வழுக்கி வழுக்கி ஏறிக்கொண்டிருக்கிறது

உமா வரதராஜன்

Rs 280-00

**ABNA OFFSET PRINTING**
# 07, Main Street, Maruthamunai. Tel.: 067 2225448, 077 2256648

ISBN : 978-955-42405-3-7